காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 31, புதன்கிழமை 14.06.2017 | கதிர் 220

## காட்டு யானை தாக்கி முதியவர் பலி

பொலன்னறுவை, ஜுன் 14

பொலன்னறுவை – அரலகங்கவில பகுதியில் காட்டு யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மேற்படிநபர்மோட்டார்சைக்

பக்கம் 18 »

# நான்கு அமைச்சர்களையும் நீக்கினால் முதல்வரையும் மாற்ற வேண்டி நேரும்

## விக்கியிடம் மாவை இடித்துரைப்பு





கொழும்பு, ஜுன் 14

**வடக்கு மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிவந்துள்ள விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நான்கு அமைச்சர்களையும் ஒரேயடியாகப் பதவி நீக்கும் முடிவை முதலமைச்சர் எடுப்பாராயின், அவரையும் சேர்த்து முழு அமைச்சரவையையும் மாற்றி அமைக்கும் அரசியல் முடிவு குறித்துப் பரிசீலிக்கும் நிலைமை நேரும்.**

**– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இடித்துரைக்கும் வகையில் எச்சரித்து அவரிடம் கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவருமான மாவை. சேனாதிராசா எம்.பி.**

பக்கம் 18 »

## பரபரப்பான நிலையில் இன்று கூடுகிறது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், ஜுன் 14

வடக்கு மாகாண சபையின் மிக முக்கிய அமர்வு இன்று மிகப் பரபரப்புக்கு மத்தியில் நடைபெறவிருக்கின்றது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதலமைச்சரால்நியமிக்கப்பட்டமூவர் அடங்கிய குழுவின் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில் அது குறித்து மாகாண சபை உறுப்பினர்களின் கருத்தைச் செவிமடுப்ப தற்காக இன்றைய விசேட அமர்வு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் கோரிக்கை

பக்கம் 18 »

## மாவையின் சவாலை ஏற்பாரா முதல்வர்?

யாழ்ப்பாணம், ஜுன் 14

'நான்கு அமைச்சர்களையும்ஒன்றாகமாற்ற முடிவெடுத்தீர்களானால் உங்களையும் சேர்த்து மாற்றுவது குறித்துப் பரிசீலிப்போம்' என்றமாவையின்சவாலை,முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் உடனடியாக ஏற்கும் நிலையில்இல்லைஎன்று விடயமறிந்த வட்டாரங்கள்தகவல்வெளியிட்டன.

பெரும்பாலும் இந்த விவகாரம்தொடர்பில்ஒரு முடிவு எடுப்பதை முதலமைச்சர் சிறிது காலத்துக்

பக்கம் 18 »

## ரயில் – கார் மோதல் பதில் நீதிவான் உட்பட மூவர் படுகாயம்!



கொழும்பு, ஜுன் 14

காலிக்குச் சென்று கொண்டிருந்த சமுத்திரா தேவி ரயிலுடன், வடக்கு

பக்கம் 18 »

## விசாரணைக் குழு அறிக்கை குறித்து இன்று விவாதிப்பதை தமிழரசுக் கட்சி எதிர்க்கும்

### மீறி விவாதம் நடந்தால் வெளிநடப்பாம்

கொழும்பு, ஜுன் 14

வடக்குமாகாணஅமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக்குழு அறிக்கை குறித்து இன்று நடைபெறும் சபையில் விசேட அமர்வில் விவாதிக்க வேண்டாம் என்று கோருவதற்கு சபையின் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் முடிவு எடுத்திருக்கின்றனர். நேற்றிரவு அவர்கள் ஒன்று கூடி இது குறித்துத் தீர்மானித்தனர் என்று நம்பகரமாக அறியவந்தது.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில்உள்ளஇலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலு

பக்கம் 18 »

## வடக்கு மாகாணசபை மோசடிகள்: விசாரிக்க ஆணைக்குழு அமையுங்கள்!

### ஜனாதிபதியிடம் அமைச்சர் ஒருவர் கோரிக்கை

கொழும்பு, ஜுன் 13

வடக்கு மாகாண சபையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இராஜாங்க அமைச்சர் ஒருவர் முன்வைக்கவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் நிரோஷன்

பக்கம் 18 »

## சரசாலையில் நடந்து சென்றவர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், ஜுன் 14

நேற்றுக்காலை வற்றாப்பளை அம்மன் ஆலய வழிபாட்டில் ஈடு பட்டுவிட்டு பஸ்ஸில் வந்து இறங்கி,

பக்கம் 18 »

## முகமாலை விபத்தில் குழந்தை பலி! இருவர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், ஜுன் 14

முகமாலைப் பகுதியில் நேற்றுக்காலைஇடம்பெற்ற விபத்தில் 3 வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்

பக்கம் 18 »

## 4 அமைச்சர்களையும் நீக்க 3 கட்சித் தலைவர்கள் ஆதரவு

கொழும்பு, ஜுன் 14

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைக் குழுவின் அறிக்கையை அடுத்து எழுந்துள்ள தற்போதைய இக்கட்டு நிலையில், சபையின் நான்கு அமைச்சர்களையும் ஒன்றாக நீக்கும் முதல்வரின் முடிவுக்குதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த மூன்று கட்சிகளினதும் தலைவர்கள் முதல்வரிடம் இணக்கமும், ஆதரவும் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

பக்கம் 18 »

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஞானசாரருக்கு பிடியாணை பிறப்பிக்க நீதியரசர்கள் மறுப்பு

கொழும்பு, ஜுன் 14

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண.ஞானசாரதேரருக்கு எதிராகப் பிடியாணை உத்தரவுபிறப்பிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையைமேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

தேரருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, நீதியரசர்களான எல்.டி. பி.தெஹிதெனிய, தேவிகா தென்னகோன் ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, தேரர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த, சட்டத்தரணி திரந்த வலலியத்த, தனது கட்சிக்காரருக்குஞானசார

பக்கம் 18 »

## நெடுங்கேணி விபத்தில் ஒருவர் பலி! மற்றொருவர் காயம்!!

யாழ்ப்பாணம், ஜுன் 14

வவுனியா – நெடுங்கேணிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகியுள்ள

பக்கம் 18 »

## மஹிந்தவின் முன்னாள் சாரதி கைதாகி விளக்க மறியலில்!

கொழும்பு, ஜுன் 14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சாரதியாகப் பணியாற்றியவர் என்று கூறப்படும் – இராணுவத்தைச் சேர்ந்த – கப்டன் திஸ்ஸ விமலசேன நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கும் உத்தரவை கொழும்பு மேலதிக

பக்கம் 18 »

## தமது கைதுக்கு தடை உத்தரவு கோரி ஞானசாரர் அடிப்படை உரிமை மீறல் மனு


கொழும்பு, ஜுன் 14

தமது சட்டத்தரணி ஊடாக உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்த பொது பலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் வண. ஞானசார தேரர், தாம் கைது செய்யப்படுகின்றமையைத் தடுக்கும் விதத்தில் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்படியும் கோரியிருக்கின்றார்.

இனங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தியமை என்ற குற்றச்சாட்டில் விசாரணை நடத்திவரும் – திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் குற்றச் செயல்களைத்தடுக்கும்–பொலிஸ் பிரிவினர் முறையான

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



'மாவை' கந்தன்
'விக்கி'யைம் தீர்ப்பான்....!

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல்   The Distinctive Voice of The Tamil Speaking People

# யாழ்ப்பாணத்தில்தான் இனவாதக் குழுக்கள்; விக்னேஸ்வரனைக் கைது செய்யுங்கள்!

## கூச்சல் போடுகிறார் கோட்டா

கொழும்பு, ஜூன் 14

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனவாதத்தைப் பரப்புகின்றவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்பட்டால் அவர்களிடம் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நுகேகொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டமையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்துக்குச் சென்றால் இனவாத குழுக்களைக் கைது செய்ய முடியும். அங்குதான் அனைவரும் இருக்கின்றனர்.

மிக பெரிய இனவாதியான வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அங்குதான் இருக்கின்றார். இன வாதிகள் தெற்கில் இருக்கின்றனர் எனக் கூறியவர்கள் யார்? விக்னேஸ்வரனே இனவாதப் பேச்சுக்களைப் பேசுகின்றார். அவரைக் கைது செய்யப் போவதாக யாரும் கூறியிருக்கின்றனரா..? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதேவேளை, பொதுபல சேனா அமைப்புடன் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையும் கோட்டாபாய ராஜபக்ஷ மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# இராஜாங்க அமைச்சரின் மகனை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, ஜூன் 14

இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவின் மகனை கைதுசெய்யுமாறு நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாகன விபத்து தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னிலையாகாமையாலேயே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு போக்குவரத்து நீதிமன்றத்தால் இந்த உத்தரவு நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில்,ஒசந்த யாப்பாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிணங்க, ஒசந்த யாப்பா அபேவர்தனவை கைது



செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு; கொழும்பு போக்குவரத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலை மாணவர்கள் மரணம்; பொலிஸாருக்கு நீதிமன்றம் அழைப்பு!

கொழும்பு, ஜூன் 14

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் தலையீடு செய்த பொலிஸ் உத்தியோகத்தரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்கரன் முன்னிலையில் நேற்று விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இந்த ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், வழக்கில் தலையீடு செய்த மாங்குளம் பொலிஸ் உத்தியோகத்தரை நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தாருடன் கலந்துரையாடி,வழக்கில் தலையீடு செய்தார் என மாங்குளம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக மன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேலும், கடந்த வருடம் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்திருந்தனர். இந்த மரணம் விபத்தால் ஏற்பட்டது எனத்தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பிரேதபரிசோதனைகளில் ஒரு மாணவனின் உடலில் துப்பாக்கிச் சூட்டு காயம் இருந்தது எனவும், இதனாலேயே அந்த மாணவன் உயிரிழந்துள்ளான் எனவும் தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் கடமையில் இருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் செயற்பாடுகள் ஆரம்பம்

கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதன் இடைக்கால நிர்வாக சபை அறிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாக சபையின் செயலாளர் பேராசிரியர் க.தேவராஜா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இப்போது பயின்றுகொண்டிருக்கும் 1 ஆம்,2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் ஆண்டு மாணவர்களை விரிவுரைகளுக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு -

இடைக்கால நிர்வாகசபைத் தலைவரும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

# விஜேராமையில் குடியேறினார் மஹிந்த!





கொழும்பு, ஜூன் 14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது கொழும்பு விஜேராம வீட்டில் குடியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலேயே நேற்று முன்தினம் மஹிந்த ராஜபக்ஷ குடியேறியுள்ளார்.

இதனை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை ,மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம மாவத்தை வீட்டில் மதவழிபாடுகள் இடம் பெற்றுள்ளன.

இந்த நிகழ்வின் போது கூட்டுஎதிர்கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்னாபிரிக்க பிரதிநிதிகளுடன் அமைச்சர் மனோகணேசன் சந்திப்பு!



கொழும்பு, ஜூன் 14

தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட பிரதிநிதிகள்குழு மற்றும் தேசியசகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் இடையில் சந்திப்பு இடம் பெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய காலகட்டத்திலே நிலவுகின்ற நல்லிணக்கத் தையும், அதை மேம்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் உயன்கொட, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பிரியாணி குணரத்ன, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத் தலைவர் சந்தன அருணதேவ உள்ளிட்டோரும் கலந்து கொண்டுள்ளனர். (க)

# 'நல்லிணக்கமே போராட்டத்தின் பலம்' சுதந்திர சதுக்கத்தில் இன்று நிகழ்வு!

கொழும்பு, ஜூன் 14

நல்லிணக்கமே போராட்டத்தின் பலம் என்ற படைவீரர் கௌரவிப்பு கலாசார நிகழ்ச்சி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இன்று இரவு 8.30 மணி முதல் 10 மணிவரை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் முக்கிய விருந்தினர்களாகவும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முப்படையினரும், பொலிஸாரும், சிவில் பாதுகாப்புப் படையினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவதற்கு முப்படையினர் பொறுப்புணர்வுடன் செயற்படுகின்றனர்.

நாட்டில் பாரதூரமான இனவாத அல்லது அடிப் படைவாத பிரச்சினை இல்லை.



சில அரசியல்வாதிகளும் ஊடகங்களும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தாலும் நாட்டில் பெரும்பாலான மக்கள் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழ்ந்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# எங்களை வருத்திய பாவம் உங்களைச் சும்மா விடாது

## படையினரைத் திட்டிய முல்லை. மக்கள்

கேப்பாபிலவு, ஜூன் 14

கேப்பாபிலவு படை முகாமுக்கு ஊடாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள், படையினர்பாதையைமூடியமையால் காட்டுப் பாதைகள் வழியாக, பெரும் சிரமங்களின் மத்தியில் பல கிலோமீற்றர்களைக் கடந்து ஊர் போய்ச் சேர்ந்தனர்.

இந்தத் துயரமான நிலை முல்லைத்தீவு மக்களுக்கு நேற்று முன்தினம் ஏற்பட்டது. துயரத்தை அனுபவித்த மக்கள் படையினரைக் கடுமையாகத் திட்டித் தீர்த்தனர். தங்களை காடு, மேடுகளால் பயணிக்க வைத்த படையினரை வற்றாப்பளை அம்மன் தண்டிப்பார் எனவும் அவர்கள் தெரிவித்தனர். தங்களைவருத்திய பாவம் படையினரைச்சும்மாவிடாது எனவும் அவர்கள் சபித்தனர்.

முல்லைத்தீவு–கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை படையினர் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கேப்பாபிலவு படை முகாமுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி, படை முகாம் ஊடாக ஆலயத்திற்குச் செல்லும் பாதை திறந்துவிடப்படும் என படைத் தரப்பு தெரிவித்தது. அதை நம்பி மக்கள் அந்தப் பாதை ஊடாக ஆலயம் சென்றனர்.

ஆனால், ஆலயம் சென்ற மக்களை உடனடியாகத் திரும்புமாறும் தாங்கள் பாதையைமூடப் போகின்றனர் எனவும் படைத் தரப்பு அறிவித்ததால் பக்தர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். எனினும், அந்த விடயத்தில் தலையிட்ட முல்லைத்தீவு அரச அதிபர், வீதியை படையினர்திறந்திருப்பர்எனவும் மக்கள் அவசரம் இன்றிச் செல்ல முடியும் எனவும் தெரிவித்தார் எனக் கூறப்படு கின்றது.

அதை நம்பிய பக்தர்கள் படை முகாம் வீதியால் பயணிக்க முற்பட்டபோது படையினர் பாதையை மூடி இருந்தனர் எனவும் அதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் காட்டு வழியால் பயணித்த பக்தர்கள், கேப்பாபிலவில் மக்கள் போராட்டம் நடத்தும் இடத்திற்குச் சென்று படையினரை சுடு சொற்களால் ஏசினர். தங்களை ஏமாற்றி, அலைக்கழித்த படையினரை வற்றாப்பளை அம்மன் பார்த்துக்கொள்வாள் எனவும் கூறிச்சென்றனர். (ம-81)

## இலங்கை - நேபாளம் இடையே நேரடி விமானப் போக்குவரத்து

இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையில்நேரடிவிமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கைக்கான நேபாளத் தூதுவர் பேராசிரியர் பிஸ்வம்ஹார் பியக்குர்யாலுடனான பேச்சின்போது ஆராயப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்து.

மேற்படி நேபாளத் தூதுவர் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவை வெளிவிவகார அமைச்சில் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பின்போதே இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி விமான சேவை ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளுதல் குறித்தும் இந்தச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# படையினரைப் பயன்படுத்தும் அளவு பாரதூரமான நிலைமைகள் இல்லை

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருத்து

கொழும்பு, ஜூன் 14

"நாட்டில் இடம்பெற்றுவரும் சிறு சிறு அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். படையினரைப் பயன்படுத்தும் அளவுக்கு மோசமான பிரச்சினைகள் எதுவும் நாட்டில் இல்லை"

– இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் பொலிஸாருக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை முப்படைகளும் வழங்கும் எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் சில பகுதிகளில் சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையுடன், விசாரணைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

முஸ்லிம் கடையொன்றுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது என்று கூறியோ, விகாரையின் பிக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறியோ பெரிய செய்திகள் உருவாக்கப்படுகின்றபோதிலும் அவை அந்தளவுக்குப் பயங்கரமான விடயங்கள் அல்ல, இவை தலைப்புச் செய்திகளுக்கு சிறந்ததாக இருப்பினும் ஊடகங்கள் இதுபோன்ற செய்திகளை வெளியிடாதிருப்பதே நல்லது.

எவ்வாறாயினும் நாட்டில் பெரும்பாலானோரிடம் நல்லிணக்கம் காணப்படுகின்றது. சிறிய அடிப்படைவாதிகள் குழுவே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது.– என்றார். (ம)

# மாகாண சபைத் தேர்தல்களையும் கூட பிற்போடுவதற்கு அரசாங்கம் திட்டம்

## குற்றம்சாட்டுகின்றது 'கபே' அமைப்பு

கொழும்பு, ஜூன் 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மட்டுமன்றி மாகாண சபைத் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடத்தாமல் பிற்போடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும்ஒரேநேரத்தில் நடத்துவதாக குறிப்பிட்டு வடக்கு, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்களையும் பிற்போட அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய குறித்த காலம் முடிவடைந்ததன் பின்னர் தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட வேண்டுமாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடனும் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பொன்றினூடாக மக்களின் இணக்கத்துடனும் புதிய சட்டமொன்றையும் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறான நிலையில், மாகாண சபைத் தேர்தல் தனித்தனியாக நடத்தப்படக் கூடாது எனக் குறிப்பிட்டு, வடக்கு, கிழக்கு மற்றும் சப்ரக முவ மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட சில அரசியல் கட்சிகள் தயாராக உள்ளன.

அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தடவையில் நடத்த அரசாங்கத்துக்கு தேவையிருக்குமாயின் வடக்கு, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் ஆயுள் காலம் நிறைவடைந்ததுடன், அனைத்து மாகாண சபைகளுக்கும் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும்.

மேலும், நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களையும் உரிய காலத்தில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றும் கீர்த்தி தென்னகோன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கூலிப்படையைப் பயன்படுத்தியே பொதுபலசேனா தாக்குதல்கள்!

## விக்கிரமபாகு கருணாரட்ன தகவல்

கொழும்பு, ஜூன் 13

பௌத்தமதத்திற்கு ஆதரவாக செயற்படுவதாகத் தெரிவித்து வரும் பொதுபலசேனா அமைப்பு, சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான தாக்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபர்களைக் கொண்டே நடத்தியுள்ளது என நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் –

"அண்மையில் நுகேகொட பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரது வியாபார நிறுவனத்திற்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அரசியல் ரீதியான எவ்வித தொடர்புகளும் அவருக்கு இல்லை. அவர் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்.

"தீ வைப்பது, வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிடுவது உள்ளிட்ட பல குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு நன்கு தேர்ச்சி பெற்றவராவார்.

"ஆனால் இவர் பொதுபல சேனாவுடன் நீண்ட காலமாகத் தொடர்பில் இருந்துள்ளமையோடு, அந்த அமைப்பின் கூலிப் படையாகவும் செயற்பட்டுள்ளார். அதன்போது ஞானசார தேரருக்கும் அவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டுள்ளது.

"இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. பொது பல சேனா அமைப்பு மதம் தொடர்பில் அதிகமாகச் சிந்திக்கும் ஒரு அமைப்பென சில பிக்குகளையும் சேர்த்து வைத்துக் கொண்டு காட்டிக் கொள்கின்றது. மறுபுறத்தில் இவ்வாறான பாதாள உலகக் கூலிப் படைகளைக் கொண்டே தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாகப் பொலிஸார் உரிய விசாரணைகளை முன்னெடுப்பர் என எதிர்பார்க்கின்றோம்." – என்றார். (உ)

## அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூன் 14

தென்னிலங்கையில் இடம்பெற்ற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அரசாங்கத்திற்குக் கிடைத்த நிவாரண உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம)

## நான்கு...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

"மாகாணசபை உறுப்பினர்களின் கருத்துக்களைத் திரட்டி வருகின்றேன். அவர்களில் பெரும்பாலானோர் நான்கு அமைச்சர்களையும் ஒன்றாக நீக்குகின்றமையையே அதிகம் விரும்புகின்றனர் போல் தெரிகின்றது. அது குறித்துப் பரிசீலிக்கின்றேன்." – என்ற சாரப்பட முதல்வர் கூறினாராம்.

அதற்குப் பதில் அளித்தார் மாவை. சேனாதிராசா.

"நீங்கள் நியமித்த குழு அது. உங்களுக்கு உரிய சிபார்சை – பரிந்துரையை – அது முன்வைத்துள்ளது. அதை ஏற்பதும், விடுவதும், மேல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதும் உங்களைப் பொறுத்தது. அதில் நாம் தலையிடமாட்டோம் என்ற முடிவை நாம் அப்போதே அறிவித்துவிட்டோம்.

"ஆனால், குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட அமைச்சர்களையும் சேர்த்து விலக்க வேண்டும் என்று சிலர் உங்களுக்குக் கூறும் ஆலோசனையை நீங்கள் ஏற்கக் கூடாது. அதனை நாம் ஏற்கவில்லை. அப்படிச் செய்வது தவறு. நாம் அத்தகைய முடிவை எதிர்க்கின்றோம்.

"குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல், விடுவிக்கப்பட்ட அமைச்சர்களையும் ஒன்றாக விலக்குவது குறித்து நீங்கள் பரிசீலித்து அந்த முடிவை எடுப்பீர்களாயின் –

"உங்களையும் சேர்த்து, முழு அமைச்சரவையையும் மாற்றி அமைக்க வேண்டும் என எமது கட்சிக்குள் பலர் கூறும் ஆலோசனையையும் நாங்கள் பரிசீலித்து முன்னெடுக்க நேரும்.

"குற்றம் இழைத்தவர்களின் தவறுக்காக குற்றம் இழைக்காதவர்களையும் தண்டிப்பதாயின், அந்தக் குற்றம் இழைத்தவர்களை வைத்து, அமைச்சரவையை நடத்திய முதல்வரும் கூடக்குற்றம் இழைத்தவர் என்றே கருதப்பட வேண்டும் – என்ற நிலைப்பாடும் எமது கட்சிக்காரர்கள் பலராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"நான்கு அமைச்சர்களையும் இந்த அறிக்கையின் அடிப்படையில் நீக்கும் முடிவை நீங்கள் எடுப்பீர்களாயின் மேற்படி எமது கட்சிக்காரர்கள் வலியுறுத்தும் விடயத்தையும் நன்கு பரிசீலித்து அதனை முன்னெடுக்க வேண்டி நேரும்." – என்ற சாரப்பட மாவை சேனாதிராசா முதல்வருக்குத் தெரியப்படுத்தினார் என நம்பகரமாக அறியவந்தது. (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதியின் வருகைகளின் பலன்

பழைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டன.

மைத்திரிபால சிறிசேன நாட்டின் தலைவராகி ஏறத்தாழ முப்பதாவது மாதத்தில் நாம் இருக்கின்றோம்.

புதிய அரசுத் தலைவர் இந்தக் காலத்துக்குள் ஒரு டசின் தடவைக்கு மேல் யாழ்ப்பாணம் வந்து போய்விட்டார்.

ஜனாதிபதியின் வருகைகளால் இங்கு ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? தமது தற்போதைய பதவிக் காலத்தின் முதல் அரைவாசியைத் தாண்டியிருக்கும் ஜனாதிபதி, இந்தக் காலத்துக்குள் வடபகுதி மக்களுக்கு சாதித்துத் தந்தவை எவை? ஒரு மதிப்பீடு அவசியமானதே.

யுத்தம் நின்று விட்டது. கனன்றுகொண்டிருந்த துப்பாக்கிகள் ஓய்ந்துவிட்டன. மோதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டன. அழிவுகள் அடங்கி விட்டன. பேராபத்துத் தணிந்திருக்கிறது. உண்மைதான். ஆனால், அதன் அர்த்தம் நிரந்தர அமைதி, நீதியான சமாதானம் மலர்ந்துவிட்டது என்பது அல்ல. அதுதான் உண்மை நிலைமை.

யுத்தம் ஓய்ந்ததும், அழிவுகள் அரங்கேறுகின்றமை நின்று போனமையும், மோதல்கள் முடிவுக்கு வந்தமையும்... எல்லாமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் மளமளவென்று நடந்தேறிய விடயங்கள்தான்.

2009 மே மூன்றாம் வாரப் பகுதியில் கொடூர யுத்தம் முடிக்கப்பட்ட காலத்தில் இருந்தே 2015 ஜனவரி 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து அகலும் வரையான காலச் சூழலிலேயே இவை எல்லாம் ஒப்பேறிவிட்டன.

அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்பதுதான் கேள்வி.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படாவிட்டாலும், ஒட்டு மொத்த நாட்டிலும் அடிப்படைக் கட்டுமானங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டன என்பது உண்மையே.

வீதிகள், ரயில் பாதைகள் மேம்படுத்தப்பட்டன. பயனற்றவை என்றாலும் - அம்பாந்தோட்டைத் துறைமுகமும், மத்தள விமான நிலையமும்கூட - அமைக்கப்பட்டன. இத்தகைய பெரிய திட்டங்கள் மூலம் வெட்டுகள், தரகுகள், கையூட்டுகள் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் அவை முன்னெடுக்கப்பட்டன என்று கூறப்பட்டாலும், அவையேனும் நடந்தன. யாழ்ப்பாணத்துக்கான 'ஏ9' கண்டி வீதி செப்பனிடப்பட்டது. வடக்கு, கிழக்கில் பல பாதைகள் 'காப்பெற்' வீதிகளாகின. வவுனியா - காங்கேசன்துறை ரயில் பாதை மீளவும் சாத்தியமாயிற்று.

அதற்குப் பிறகு, மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பி, நாங்கள் எல்லோரும் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவை நிறைவேற்று அதிகாரத்துக்குக் கொண்டு வந்தமையின் மூலம் கண்ட பலன் என்ன? பிரதான இரு கட்சிகளும் சேர்ந்து நல்லாட்சி அரசு என்ற பெயரில் கூட்டாட்சி நிறுவி சாதித்தவைதான் என்னவோ?

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டு விட்டதா...? ஆக்கிரமிக்கப்பட்ட நமது மக்களின் காணிகள் மீளளிக்கப்பட்டு விட்டனவா...? அரசியல் கைதிகளின் விடயத்துக்கு தீர்வு வந்து விட்டதா...? காணாமற்போனோர் விவகாரத்துக்கு தீர்வுகாணும் பயனுள்ள நகர்வுகள் ஏதும் எடுக்கப்பட்டுள்ளனவா...? காணாமலாக்கப்படும் கொடூரத்தைப் புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் எத்தனம் கிஞ்சித்தாவதும் முன்னெடுக்கப்பட்டதா? யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கு - பொறுப்புக் கூறலுக்கு - இந்த அரசு இணங்கி ஏதேனும் சாத்தியமான நடவடிக்கைகளை இதுவரை எடுத்ததா? இலங்கை இனப் பிரச்சினையின் அடிப்படைச் சிக்கல்களை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்வு, புதிய அரசமைப்பு வடிவத்தில் முன்னெடுக்கப்படுகின்றது என்று கூறப்பட்டாலும் கூட, இன்னும் திருப்தி தரும் திசையில் அது நகரவேயில்லை. அந்த முயற்சிகளின் எதிர்காலம் பற்றிய எதிர்வு கூறல்கள் அவ நம்பிக்கையையே தருகின்றன.

இந்தப் பின்புலத்தில் இந்த நல்லாட்சி அரசுக்கு முண்டு கொடுத்துத் தமிழர் தரப்பு பெறப்போகும் பரிசு - விளைவு - யாது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

மாதத்துக்கு ஒரு தடவை ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வந்து கூட்டங்களை நடத்தி வெறும் அறிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளை வெளியிடுவதில் அர்த்தமில்லை.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் நேரில் பேசினர்.

யுத்தத்தின் போதும், யுத்தம் முடிவடைந்த பின்னரும் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்டவர்களின் விவரங்களை உடனடியாக வெளியிடுங்கள் என முப்படையினருக்கும் தான் உத்தரவிடுவார் என இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தங்களிடம் உறுதியளித்தார் எனக் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் கூறப்பட்டது. அப்படி நடந்தால் நல்லது.

ஆனால், இப்போது தடுப்பில் உள்ளோரின் முழுப் பட்டியலை வெளியிடுவதற்கு இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்றே சந்திப்பில் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் தெரிவித்திருக்கின்றார்.

இவை இரண்டுக்கும் இடையில் இணக்கமான மேல் நடவடிக்கை என்னதான் வரப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் நாம் பார்க்க வேண்டும்.

எது, எப்படியென்றாலும் மாதம்தோறும் வடக்கே வரும் ஜனாதிபதியின் நடவடிக்கை மூலம், தமிழருக்கு - வடக்குத் தமிழருக்கு - கிட்டியவை எவை என்பதை மதிப்பீடு செய்வது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமான, தட்டிக் கழிக்கக்கூடாத ஒன்றாகும்.

# இரு லொத்தர் சபைகளும் மீண்டும் ரவியிடம்; பெரும் வேடிக்கை என்கிறது மஹிந்த அணி!

கொழும்பு, ஜூன் 14

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் சற்றும் தொடர்பில்லாத இரு லொத்தர் சபைகளும் மீண்டும் ரவி கருணாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமை பெரும் வேடிக்கையாகத் தெரிகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''உலக வரலாற்றிலேயே லொத்தர்சபைகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது இந்த அரசின் நடவடிக்கைகளை சர்வதேசம் கேள்விக் குறியுடன் பார்ப்பதற்கு வழி செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வற்புறுத்தல்களாலேயே ரவி கருணாநாயக்கவுக்கு இந்தப் பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வாறான அர்த்தமற்ற காரியங்களுக்குத் துணை போவதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பலவீனம் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேசத்திலும் அம்பலமாகியிருக்கின்றது'' என்று அவர் தெரிவித்துள்ளார். (க)



# மண்சரிவில் உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டது 14 நாள்களின் பின்னர் !

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையால் 200 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமையுடன் பலர் காணாமற்போயுள்ளனர்.

மண் சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் காணாமற் போனவர்களைத் தேடும் பணிகள் தற்போதும் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் பதுரெலிய அத்வல்தொட்டை திகன்ன கந்தவில் இடம்பெற்ற மண் சரிவால் 6 பேர் காணாமற் போயிருந்தனர்.

இவர்களில் ஒருவரது சடலம் 14 நாள்களுக்குப் பின்னர் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது என பதுரெலிய பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பீ.முனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட அனர்த்தத்தினால் மூன்று வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளமையுடன், ஆறு பேர் வரை காணாமற்போயிருந்தனர்.

இவர்களைதேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இந்தச் சடலம் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் காணாமற் போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# வகுப்பின் 34 மாணவரையும் தடியினால் தாக்கினாராம் பௌத்த மத குரு ஒருவர்

தம்புள்ள தேசிய பாடசாலையின் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 34 மாணவர்களுக்கு தடியினால் தாக்கிய மதகுரு ஒருவர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு தாக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையின் சிங்களம் மற்றும் பௌத்த பாடவிதானத்திற்குப் பொறுப்பானமதகுரு, நேற்று முன்தினம் மாலை மாணவர்களுக்குத் தாம் நடத்திய மேலதிக வகுப்பின் போதே இவ்வாறு அவர்களைத் தாக்கினார் எனக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளனவர்களில் 18மாணவிகளும் அடங்குகின்றனர்.

கடும் தாக்குதலுக்கு இலக்கானமையால் பல மாணவர்கள் தம்புள்ள மருத்துமனையில் சிகிச்சை பெற்றுள்ளமையுடன் இதன் காரணமாக அவர்கள் நேற்றுப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவுமில்லை.

மேலதிக வகுப்புக்காக அப்பியாச கொப்பிகளைக் கொண்டு வராதமையால் அவர்கள் இவ்வாறு தாக்கப்பட்டனர் எனத் தாக்குதலுக்கு உள்ள மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# நாட்டின் பத்து மாவட்டங்களில் தொடர்கிறது மோசமான வறட்சி

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பத்து மாவட்டங்களில் பெரும் வறட்சி நிலை தோன்றி உள்ளது என்றும் -

அதனால் 8 லட்சத்து 49 ஆயிரத்து 752 பேர் குடிதண்ணீர் கிடையாமையால் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகி உள்ளனர் என்றும் -

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 570 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 507 குடும்பங்களும் குடிதண்ணீர் கிடையாமல் பெரும் அவஸ்தைகளுக்கு ஆளாகி உள்ளனர் என்றும் நிலையத்தின் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

இதேவேளை - வெள்ளத்தினாலும், மண் சரிவினாலும் பதின்மூன்று மாவட்டங்களில் தொடர்ந்தும் பாதிப்புற்ற நிலை காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, களுத்துறை, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, மாத்தளை, நுவரெலியா,கேகாலை, கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நிலைமை இன்னும்சீராகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

நீர் வெறுப்பு நோயைத் தடுப்போம்!

கடி காயத்துக்கு சிகிச்சை பெறச் செல்லும்போது, விலங்கின் விசர் நோய் தடுப்பூசி (ARV) வளர்ப்பு பிராணிக்கு கொடுத்தபோது தரப்பட்டிருக்கும் அட்டையையும் மறக்காது கொண்டுசெல்லவும்.

செல்லப் பிராணிகளை அவதானத்துடன் பராமரிப்போம்



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்.மாநகரசபை.

## நாளை

15.06.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் பி.ப 2.28 வரை
திதி : ஷஷ்டி பி.இ 1.32 வரை

சுபநேரம் : 7.23 – 8.53 வரை
இராகுகாலம் : 1.23 – 2.53 வரை

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகளின் ஊடாக அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது அரசு!



## நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவிக்கிறார்

கொழும்பு, ஜூன் 14

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகளின் ஊடாக அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், சமஷ்டித் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு முழுவதும் இன்று முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதை வெறுமனே ஓர் இனவாதச் செயற்பாடாகப் பார்க்க முடியாது. இதன் பின்னால் பெரும் அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று இருக்கின்றது.

இந்த இனவாதச் செயற்பாடுகளின் பின்னால் ஒளிந்து கொண்டு அரசு அதன் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றப் போகின்றது. அரசின் எந்தெந்தத் திட்டங்களுக்கு மக்களின் எதிர்ப்பு உள்ளதோ அந்தத்திட்டங்கள் அனைத்தையும் இவ்வாறு நிறைவேற்றுவதே அரசின் ஒரே நோக்கமாகும்.

இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் என்ற பெயரில் முதலில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்படும். அந்தச்சட்டத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் மேலும் ஒத்திப் போடப்படும். சமஷ்டி தீர்வை வழங்கும் அரசமைப்பை எப்படியாவது நிறைவேற்றி விட வேண்டும் என்று இந்த அரசு துடியாய்த் துடிக்கின்றது.

அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றமையால் முஸ்லிம் சிங்களப் பிரச்சினையில் மறைந்து கொண்டு அவசர காலச்சட்டத்தைப் பயன் படுத்தி இந்த அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தமும் இவ்வாறே நிறைவேற்றப்படும். இந்த அடிப்படையில் சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம் ஏற்பட்டால் அதில் நன்மையடையப் போவது எவரென்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

கறுப்பு ஜூலையை உருவாக்கியவர்கள்ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். அதனால் நன்மையடைந்தவர் பிரபாகரன்.

அந்தக் கலவரத்தில் சொத்துகள் மற்றும் இழந்த தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று புலிகளுக்குப் பணம் அனுப்பினர். அதன் பின்புதான் தற்கொலைப் புலிகளே உருவாகினர். கறுப்பு ஜூலை வீடியோக்களைப் புகைப் படங்களைக் காட்டிக்காட்டியே தற்கொலைப் புலிகள் உருவாக்கப்பட்டனர்.

இப்போது இந்த அரசு வேறொரு ஜூலையை உருவாக்கப் போகின்றது. நல்லாட்சி என்ற பெயரில் நாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கும் செயற்பாடுகளில் இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. இந்த உண்மையை உணர்ந்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.- என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

# மின்சாரம் சிக்கனம்; மீண்டும் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 14

மின் உற்பத்திக்கு போதுமான மழைவீழ்ச்சி இடம்பெறவில்லை என்று மின்வலு அமைச்சின் ஊடகப் பேச்சாளரும் அபிவிருத்திப் பணிப்பாளருமான சுரஞ்சன் ஜயவர்த்தன தெரிவித்தார்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மின் உற்பத்தி நிலையங் கள் சார்ந்த நீர்த்தேக்கங் களில் நீர் மட்டம் 48 சதவீதத்தைத் தாண்டி அதிகரித்துள்ளது.

எனினும், இது மின் உற்பத்திக்கு போதுமானதாக இல்லை. இதன் காரணமாக மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று ஜயவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார். (க)

# அமைச்சர் ரவிக்கு சுரண்டிப் பிழைக்க கிடைத்துள்ளது இன்னொரு சந்தர்ப்பம்!

## விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 14

இரு லொத்தர் சபைகளும் ரவி கருணாநாயக்கவுக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமையால் அவருக்குச் சுரண்டிப் பிழைக்க இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏற்கனவே நிதி அமைச்சராக இருந்தபோது லொத்தர் விவகாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ரவி கருணாநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரான பின்னரும் இரு லொத்தர் சபைகளும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமையின் காரணகாரியம் புரியவில்லை.

அமைச்சர்களை மாற்றுவதும் அவர்களுக்கான பொறுப்புகளை வழங்குவதும் வெறும் கேலிக்கூத்தாகிப் போய் விட்டனவே தவிர, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் கருத்திற் கொள்ளப்படவில்லை.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் சற்றும் பொருத்தமில்லாத பொறுப்புகள் ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றமை அவர் மேன்மேலும் சம்பாதித்துக் கொள்ளட்டும் என்பதற் காகவே.

இவ்வாறான அர்த்தமற்ற நடவடிக்கைகளால் நாட்டின் எதிர்காலம் மேலும் இருண்டு கொண்டே செல்கிறது. விடிவொன்று வேண்டுமானால் இந்த அரசு மாறியே தீரவேண்டும்.- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் கருத்துகளை தவிர்க்கவேண்டும்!

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 14

இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் கருத்துகள் வெளியிடப்படுகின்றமை தவிர்க்கப் படவேண்டும் என் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் அமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே மஹிந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏதாவது ஒரு சம்பவம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தகவல் கிடைத்தால் அதனை மக்கள் மத்தியில் முன்வைக்கும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள மத ஸ்தலங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் வர்த்தக நிலையங்களும் தாக்குதலுக்கு உள்ளாகின.

அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் பொலிஸார் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர். சில கருத்துகள் இனவாதமானவைகளே.

இதேவேளை, அண்மையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க கடுமையாக திட்டிய பிரதேச ஊடகவியலாளர் என்னைச் சந்தித்தார்.

அமைச்சர்கள் தங்கள் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்கின்றமை மிகவும் முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# பாகிஸ்தான் கடற்படைத் தளபதி பாதுகாப்புச் செயலருடன் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 14

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கடற்படை தளபதி அட்மிரல் மொஹமட் சகாவுல்லாஹ் பாதுகாப்பு செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாகிஸ்தான் கடற்படை தளபதி ஆகியோருக்கிடையில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில் இருவருக்குமிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் மொஹமட் சகாவுல்லாஹ், இலங்கைப் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி எயார் சீப் மாஷல் கோலித குணதிலகவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு துணை போகாது கூட்டமைப்பு!



ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன் 14

அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமையை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இத்றகுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போகாது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊழல் மோசடி, லஞ்சம் மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சமூக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படும் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். மேற்படி விரோதமான போக்கில் செயற்பட்ட கடந்த கால ஆட்சியைத் தோல்வியடையச் செய்வதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுடன் இணைந்து செயற்பட்டமையை அறியாதவர்கள் இருக்க முடியாது.

விரோதப் போக்குடைய அரசியல்வாதிகளை மட்டுமல்லாமல் இவ்வாறான போக்குடையவர்களையும் கூட்டமைப்பு எதிர்த்தே வருகின்றது. அவ்வாறானவர்களை மக்கள் கடந்த காலத்தில் நிராகரித்து விட்டனர்.

ஊழல் மோசடிக் காரர்களுக்கு முண்டு கொடுக்கின்றவர்கள் மற்றும் வக்காலத்து வாங்குகின்றவர்களைநாமும் எமது மக்களும் மன்னிக்கவே மாட்டோம். சிலரைச் சில நாள்கள் ஏமாற்றலாம். பலரைப் பல நாள்கள் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா நாள்களும் ஏமாற்ற முடியாது என்பதை ஊழல் வாதிகள் உணர்ந்தாக வேண்டும்.

கடந்த கால ஆட்சியாளர்கள் தாமும் ஊழல் செய்து, மற்றவர்களையும் ஊழல் செய்யத் தாராளமாக அனுமதித்தனர். இதன் விளைவாகக் கடந்த கால ஆட்சியாளர்கள் மக்களால் தூக்கி வீசப்பட்டனர்.

ஆனால், அவர்க ளோடு இணைந்து ஊழல் புரிந்த பலர் தப்பிப் பிழைத்து வருகின்றனர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கௌரவமாக வரவேற்கின்றோம். ஊழல் மோசடிகளால் ஏற்பட்ட கறைகளைக் கண்ணீரால் கழுவி விட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். -என்றார். (ச)



## 15 வருடங்களின் பின் 49 லட்சம் ரூபா பெற்ற பணிப் பெண்!

சவுதி அரேபியாவில் 15 வருடங்களுக்கு மேலாக சம்பளம் இன்றி பணிப் பெண்ணாகப் பணியாற்றி வந்த மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 49 லட்சம் ரூபா பணம் கிடைத்துள்ளது.

இலங்கை வரலாற்றில் வீட்டுப் பணிப்பெண் ஒருவருக்குக் கிடைத்த உயர்ந்த பட்ச நிலுவைத் தொகை இது வாகும்.

இந்தப் பெண் போலியான தகவல்களை வழங்கி சவுதி அரேபியா சென்றிருந்த காரணத்தாலேயே நாடு திரும்ப முடியாமல் இருந்தார். இந்த நிலையில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அமைச்சர் தலதா அத்துக்கோரளவின் மத்தியஸ்தத்தால் சவுதி அரேபியாவின் தொழில் அமைச்சு இதனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இனவாத அமைப்புக்களை தடை செய்ய வேண்டும்!

### அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

நாட்டில் இனங்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கும் பேரினவாதக் குழுக்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-இவ்வாறு மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே



அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தலைசிறந்த புலனாய்வு வலையமைப்பைக்கொண்ட இலங்கைப் பொலிஸாரால் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்ய முடியாதுள்ளமை எமக்கு பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. சிங்கள இனவாத சக்திகள் கடந்த ஆட்சிக் காலப் பகுதியில் தோற்றம் பெற்ற நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தத் தவறியமையால்தான், கடந்த ஆட்சியை மாற்றி புதிய ஆட்சி கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியிலும் இனவாதச் செயற்பாடுகள் தொடர்கதையாகவே மாறியுள்ளன.

இவை திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாகும். இதனால் எமது பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. நாட்டின் அமைதியற்ற சூழல் கருதி முதலீட்டாளர்கள் முதலீடுகளை செய்ய முன்வருவதில்லை. -என்றுள்ளது. (ச)

### கிழக்கு மாகாணசபையின் செயற்றிறன் இன்மையால்

## முடிவின்றித் தொடர்கின்றது சத்தியாக்கிரகப் போராட்டம்!




மட்டு. பட்டதாரிகள் சீற்றம்

மட்டக்களப்பு, ஜூன் 14

கிழக்கு மாகாணசபையின் செயற்றிறன் இல்லாத செயற்பாடுகளாலேயே, எமது போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் காந்தி பூங்கா முன்பாக மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம், நேற்று செவ்வாய்க்கிழமை 113 ஆவது நாளாகவும் மேற் கொள்ளப்பட்டது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் எட்டு மாகாணங்களில் 2016 ஆம் ஆண்டுக்கான ஆளணிகள் உள்ளீர்க்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கிழக்கு மாகாணசபையில் இது வரையில் விண்ணப்பம் கூட கோரப்படவில்லை. எமது நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு பச்சைக்கொடி காட்டியுள்ளது. எனினும், உரிய தரப்பினரிடம் இருந்து உறுதியான பதில்கள் இதுவரையில் வழங்கப்படாமை கவலையளிக்கின்றது.

இந்த நாட்டில் ஒரு சமூகம் தொடர்ச்சியாக வீதியில் இறங்கி போராடும் நிலைமை ஏற்பட்டுள்ளமை வருத்தமான விடயம். இவ்வாறான போராட்டங்களை வேடிக்கை பார்ப்பதை விடுத்து, தீர்வை வழங்க நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றனர். (ச)

## இரண்டு பசுக்களை திருடியவர் கைது!

கந்தளாய், ஜூன் 14

திருகோணமலை கந்தளாயில் இரண்டு பசு மாடுகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் 29 வயதுடைய ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தனது வீட்டு வளவில் கட்டப்பட்டிருந்த இரண்டு பசு மாடுகள் திருட்டுப் போயுள்ளன என்று பொலிஸாரிடம் அதன் உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனை அடுத்து, இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போதே , மேற்படி சந்தேக நபரைப் பொலிஸார் கைதுசெய்தனர். (ச)

## திருமலையில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு!

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சுமார் 35 கிராமங்களில் தற்போது நிலவும்வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள், தெரிவித்துள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மூதூர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு நீர் கொண்டுவரப்படும் மகாவலி ஆற்றின் நீலாப்பொலகங்கையின் நீரூற்றில், நீர் வற்றியுள்ளமையாலேயே, இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை மாவட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## ஆலயங்களுக்குப் பூச்சொரிகின்றனர் தமிழரை அழித்த ஹெலிகளால்!

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை ஆதங்கம்



கடந்த காலத்தில் தமிழ் இனத்தை அழித்த ஹெலிக்கொப்டர்களால் , லட்சக் கணக்கில் செலவு செய்து கோயில்களுக்குப் பூச்சொரிகின்றார்கள்.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வுக் கொடி வாரத்தை முன்னிட்டு திருஞானசம்பந்தர் குரு பூசைப் பேரணி மட்டக்களப்பு கோவில்போரதீவு கண்ணகியம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசில் இந்து மதத்தையும், தமிழினத்தையும் பேணிப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. வீண் விரயம் செய்யும் பணத்தை , அறநெறி ஆசிரியர்களுக்கு மனம் குளிரக்கூடிய வேதனமாக அரசு வழங்கலாம்.

ஏனைய மதங்களைப் பாதுகாப்பதற்கு அந்தந்த மதங்களைச் சேர்ந்த மக்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மதப் பெரியார்கள், தனவந்தர்கள், கல்விமான்கள் என அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். ஆனால், தமிழ் மக்கள் வாழும் கிராமங்களில் வசதி படைத்தவர்கள், உயர் பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் உயர் குடியினருமே அமைப்புக்களில் பதவி வகிக்கிறார்கள். -என்றார். (ச)

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மன்னிப்புக் கோர வேண்டும்; ஜெனீவாவில் முறையிடப்போகிறாராம் சரத் வீரசேகர!

கொழும்பு, ஜூன் 14

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தலைவரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்யவுள்ளேன் என்று இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்படையின் முன்னாள் அதிகாரியுமான றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியில் உள்ள றியர் அட்மிரல் சரத் வீரசேகர, தற்போது இடம்பெற்று வரும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 35 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக இன்று ஜெனீவாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது இலங்கைக்கு ஆதரவான பரப்புரையில் ஈடுபடவுள்ளேன் என்றும், இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்கிறார் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு எதிராக, முறைப்பாடு ஒன்றை செய்யவுள்ளேன் என்றும் றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு எதிராக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஜாக்குலின் அலெக்ஸாண்டர் மாசா மாரெல்லியிடம் இந்த முறைப்பாடு கையளிக்கப்படும்.

இலங்கையின் நீதித்துறையை விமர்சித்தும், அரசமைப்பு மறுசீரமைப்புக்கு அழைப்பு விடுத்தும், நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தலையீடு செய்கிறார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரியுள்ள கலப்பு நீதிமன்றம் இலங்கையின் அரசமைப்பை மீறும் செயல்.

எனவே, பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியதற்காகவும், எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்தமைக்காகவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.- என்றும் அவர் தெரிவித்தார். (க)

# இலங்கையர்களிடம் ஒரு கோடி ரூபா மோசடி; நைஜீரியா நாட்டவர்களுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜூன் 14

பிரித்தானிய கோடீஸ்வரர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என கூறி இலங்கையர்களிடம் ஒரு கோடி ரூபா வரையில் மோசடி செய்த நைஜீரியா நாட்டை சேர்ந்தவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த கோடீஸ்வரர் குடும்பத்தவர்கள் எனக் குறிப்பிட்டு இலங்கையர்கள் பலரை பேஸ்புக் ஊடாக நைஜீரிய நாட்டவர்கள் ஏமாற்றி பணம் பறித்துள்ளனர்.

அவர் இலங்கைக்கு வருகை தந்து பேஸ்புக் ஊடாக அரச மற்றும் தனியார் பிரிவு அதிகாரிகள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களுடன் பழகியுள்ளனர்.

பின்னர் அவர்களை ஏமாற்றி கோடி கணக்கில் பணத்தைச் சூறையாடியுள்ளனர். இந்த நடவடிக்கையில் 10 நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களை எதிர் வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல பதில் நீதிவான் ஹேமன்ன வெத்தசிங்க உத்தரவிட்டுள்ளார்.

குற்ற விசாரணை திணைக்களத்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முறைப்பாட்டுக்கமைய இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிட்டத்தட்ட 3 மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பின்னர் நிபந்தனை பிணையின் அடிப்படியில் விடுவிக்கப்படுவர் என நீதிமன்றம் அறிவித்த போதிலும், அவர்களுக்காக எவரும் பிணை வழங்க முன்வராமையால் நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.


இந்த மோசடிக் குழுவினர் காலி, பயாகல, உடுகம மற்றும் மாலபே உட்பட பல ஹோட்டல்களில் தங்கியிருந்து இந்த மோசடியைச் செய்துள்ளனர் எனப் பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

காலியைச் சேர்ந்த பெண் ஒருவரின் வங்கிக் கணக்கில் 58 ஆயிரம் ரூபா பணம் இந்தச் சந்தேகநபர்களால் எடுக்கப்பட்டமை குறித்தும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கோடி கணக்கில் மோசடியாக பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் அரச மற்றும் தனியார் வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (க)

# வெள்ள அனர்த்தம் இடம்பெற்ற பகுதிகளில் உதவிப் பணிகளில் அமெரிக்க கடற்படையினர்!





கொழும்பு, ஜூன் 14

அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ்.லேக் எரி கப்பலில், கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையினர், இலங்கைக் கடற்படையின் மரைன் படைப் பிரிவினருடன் இணைந்து, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீட்புக்குப் பிந்திய உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்காக, யு.எஸ். எஸ்.லேக் எரி என்ற போர்க் கப்பலை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள இந்தப் போர்க் கப்பலில் உள்ள, அமெரிக்க கடற்படையினர், கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உதவிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

119 அமெரிக்கக் கடற்படையினரும், 50 இலங்கைக் கடற்படை மரைன் படையினரும் இணைந்து மாத்தறையில் அணைகளைத் திருத்தியமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

72 அமெரிக்கக் கடற்படையினரும், 21 இலங்கைக் கடற்படை மரைன் படையினரும் இணைந்து, காலி, கொழும்பு மாவட்டங்களில் கிணறுகளை சுத்தம் செய்தல், நீர் சுத்திகரிப்பு, புனர்வாழ்வு நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு வாரகாலம் அமெரிக்கப் படையினர் இலங்கையில் தங்கியிருந்து இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

# ஜனவரி மாதம் முதல் 150 பேர் டெங்கு நோயால் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 14

டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரையில் இவ்வாறு டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 150 பேர் மரணித்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 60 ஆயிரத்து 800 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் நிபுணத்துவ மருத்துவர் பிரமிலா சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கையின் துறைமுக அபிவிருத்தி குறித்து மஹிந்த சமரசிங்கவுடன் இந்திய தூதுவர் பேச்சு!

கொழும்பு, ஜூன் 14

இலங்கையின் துறை முகங்கள், மற்றும் கப்பல் முறையை அபிவிருத்தி செய்வதில் இந்தியா எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பாக கொழும்பில் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, இலங்கையின் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவைச் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுகளை நடத்தியுள்ளார்.



அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது, துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சராக மஹிந்த சமரசிங்க பொறுப்பேற்றிருந்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க பேச்சுகளை நடத்தி வரும் நிலையில், துறைமுகங்கள், கப்பல்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக அவருடன் இந்தியத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்புத் துறைமுக கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி போன்றவற்றில் இந்தியா ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# அமெ.நிறுவனத்துக்கு கைம்மாறும் நில அளவைத் திணைக்களம்!

## அளவையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்.14

இலங்கை நில அளவைத் திணைக்களத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்க காணி அமைச்சு தயாராகி வருகின்றது என அரச நில அளவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில், அமைச்சரவையில் சமர்ப்பிக்க காணி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அந்தச்சங்கத்தின் தலைவர் துமிந்த உடுகம சுட்டிக் காட்டியுள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணி அமைச்சராக ஜோன் அமரதுங்க இருந்த காலத்தில், இதுபோன்ற அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் எழுந்த எதிர்ப்புக் காரணமாக அது நிராகரிக்கப்பட்டது.

இந்தநிலையில், தற்போதைய காணி அமைச்சர் கயந்த கருணாதிலக நில அளவைத் திணைக்களத்தை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக் கின்றார்.-என்றார். (எ)

# இனவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு முஸ்லிம் எம்.பிக்கள் எதிரணிக்கு மாற வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு



முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத நடவடிக்கையை கட்டுப்படுத்த வேண்டுமெனில், அரசுடன் இணைந்துள்ள 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரவேண்டும்.

-இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவையின் இப்தார் நிகழ்வு அக்கரைப்பற்றில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருமாறு, அரசுக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காலக்கெடு விதிக்க வேண்டும். இந்தக் காலக்கெடுவுக்குள் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

எமது சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகளைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பொலிஸார் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறி, ஆட்சியாளர்கள் தப்பித்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது . -என்றார். (ச)

# தினசரி ராசி பலன் 14.06.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 31 ஆம் நாள் பஞ்சமித்திதி பி.இ. 4.27 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: திருவோணம் மாலை 3.32 மணி வரை. பின்னர் அவிட்டம். சித்தயோகம் மாலை 3.32 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 12.10 மணி முதல் 1.45 மணி வரை. சுபநேரம். மாலை 4.24 மணி முதல் 5.54 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. வைகாசி மாத தேய்பிறை பஞ்சமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவோணம்.**

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. எந்தத் தொழிலிலும் அதிக முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. தேவையற்ற வழக்குகளால் அலைய நேரிடும். கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்க்கவும்.

**ரிஷபம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிறைந்திருக்கும். வெளிநாட்டு உறவினர்வரவால் கலகலப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பு இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவார்கள்.

**கடகம்:** இன்பமான நாள். பொருள் வளம், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். அரச வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும்.

**சிம்மம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் அன்பும், பண்பும் நிறைந்து இருக்கும். செய்தொழில் முன்னேற்றமடையும்.

**கன்னி:** நன்மையான நாள். தொழில் செய்யுமிடத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டாகும். குடும்பத்தில் அன்னியோன்யம் பெருகும்.

**துலாம்:** கவலையான நாள். செய்யும் தொழிலில் லாபம் குறையும். உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் நிறைவேறாமற் போகும்.

**விருச்சிகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவினங்கள் அதிகரிக்கின்றமையால் கடன்பட நேரிடும். செய்யும் தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**தனுசு:** யோகமான நாள். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் அமையும். அசையாச் சொத்துகளை வாங்கும் யோகம் உண்டாகும். திருமண வாய்ப்பு உண்டாகும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். தொழிலாளர் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும். வியாபாரம் நன்கு செழிப்படையும்.

**கும்பம்:** துன்பமான நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரிடும். உறவினர்கள் பகைவர்களாக மாறுவார்கள்.

**மீனம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். போட்டி பந்தயங்களால் லாபம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: மகம், பூரம் உத்தரம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# முஸ்லிம்கள் நிதானம் இழக்க வேண்டாம் வேண்டுகோள் விடுக்கிறார் மஸ்தான் எம்.பி.!

நாட்டில் முஸ்லிம்களுடைய மதத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றை தீக்கிரையாக்கி அதன் மூலம் இனவாதிகள் இனக்கலவரத்தை கொண்டுவர முயற்சிக்கின்றனர். இதனைக் கண்டு ஆவேசப்பட்டு முஸ்லிம்கள் நிதானத்தை இழக்க வேண்டாம்.

-இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாம் இந்த புனிதமான ரமழான் மாதத்தில் பொறுமையை கடைப்பிடித்து இறைவனிடம் இனக்கலவரத்தை ஏற்படுத்த முனையும் சக்திகளுக்கு சரியான தண்டனை கிடைக்க பிரார்த்தனைகள் செய்துகொள்ள வேண்டும்.

அண்மைக்காலமாக சில மக்கள் பிரதிநிதிகள் முஸ்லிம் இளைஞர்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் பேசுகின்றனர். அது தவறு. ஏனெனில், இப்பொழுது நாம் எதிர்நோக்கியுள்ள இந்த துர்ப்பாக்கியமான நிலையை வன் முறைகள் மூலம் தீர்க்கலாம் என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். -என்றுள்ளது. (ச)

# நடேஸ்வரா மாணவரை குளவி கொட்டியது; 12 பேர் பாதிப்பு!

காங்கேசன்துறை, ஜூன் 14

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை குளவி கொட்டிய நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் 12 மாணவர்கள் தெல்லிப் பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர் .

பாடசாலை வளாகத்தில் இருந்த மரம் ஒன்றில் காணப்பட்ட குளவிக் கூடு, காற்றுக்கு கலைந்ததாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிள்ளைகளின் அலறல் சத்தத்தைக் கேட்டு உதவிக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளார் எனக் காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வறட்சி நிவாரணக் கொடுப்பனவுகள் வடக்கில் சீராக வழங்கப்படவில்லை!

## அரசு ஏமாற்றிவிட்டது என்கின்றனர் விவசாயிகள்

வடக்கு மாகாணத்தில் விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணக் கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படவில்லை. அரசு எம்மை ஏமாற்றி விட்டது என வடக்கு மாகாண விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில்-

கடந்த காலபோக நெற்பயிர்செய்கை வறட்சி காரணமாக அழிவடைந்தமையால் விவசாயிகள் பலரும் கடுமையாகப் பாதிப்படைந்தனர். இந்த நிலையில் விவசாய அழிவுக்கான கொடுப்பனவாக ஏக்கர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என அரசு தெரிவித்திருந்தது. பின்னர், மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் மாதாந்தம் வறட்சிக் கொடுப்பனவு 6 மாதங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த ஏப்ரல் மாதம் விவசாயிகளின் வங்கிக்கணக்கு இலக்கத்துக்கு 8 ஆயிரத்து 650 ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. இந்த நிலையில், இரண்டு மாதங்கள் கடந்தும் அடுத்த கொடுப்பனவுகள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை -- என்றனர்.

வறட்சியானகாலநிலை நீடிக்கின்றமையால் விவசாயிகள் காலபோகம் மட்டுமன்றி சிறுபோகம் கூட மேற்கொள்ள முடியாது வறுமையில் வாடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச- 100)

# சந்தைகளில் மருந்து விசிறப்பட்ட பழங்கள்: யாழ். குடாநாட்டு மக்களுக்கு அறிவுறுத்து!



யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். குடாநாட்டு சந்தைகளில் இரசாயன மருந்துகள் விசிறப்பட்டு பழுக்க வைத்த பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால், பொது மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மாம்பழம் மற்றும் பலாப்பழம் போன்றவற்றின் பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது. அதை அடுத்து திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம், சங்கானை, கொடிகாமம், சாவகச்சேரி போன்ற சந்தைகளுக்கு அதிகளவான மாம்பழங்கள்விற்பனைக்குகொண்டு வரப்படுகின்றன.

சந்தைகளில் விற்பனை செய்யப்படும் பழங்கள் அநேகமாக இரசாயன மருந்து விசிறப்பட்டே பழுக்கவைக்கப்படுகின்றன.

இந்தப் பழங்களை மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இதன் காரணமாக அதிகளவான உடற்பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத் துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# இரத்ததானம் வழங்கி உயிர் காப்போம்!



உலக சுகாதார நிறுவனம், இரத்ததானம் செய்வோரை சிறப்பிக்கும் விதமாக ஜூன் மாதம் 14ஆம் திகதியை, உலக இரத்த வழங்குநர் நாளாக கொண்டாடிவருகிறது.

2005 ஆம் ஆண்டு முதல் அனுஷ்டிக்கப்பட்டு வரும் இந்த நாள், ஏ,பி, ஓ இரத்தக் குழு அமைப்பைக் கண்டு பிடித்து நோபல் பரிசு பெற்றவரான கார்ல் லாண்ட் ஸ்டெய்னெரின் (karl Land Steiner) பிறந்த நாள் ஆகும்.

இரத்தத்தை நாம் பிறருக்கு வழங்குகின்றமை, அவர்களின் உயிரைக் காக்கும் உயரிய சேவைக்குச் சமம் ஆகும்.



மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. இரத்த தானம் செய்பவர் ஒரு நேரத்தில் 200 முதல் 300 மி.லி. வரை இரத்ததானம் செய்யலாம். அவ்வாறு கொடுத்த இரத்தம் நாம் உண்ணும் சாதாரண உணவில் மீண்டும் உற்பத்தியாகி விடும். 3 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்த தானம் செய்யலாம்.




### புதிய இரத்தம் உடலுக்கு நன்மையே!

இரத்த தானம் செய்வதற்கு 5, 10 நிமிடங்கள் போதும். பொதுவாக 17 – 60 வயதுக்கு இடைப்பட்ட சுகதேகிகளால் இரத்ததானம் செய்ய முடியும். இரத்த தானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. சொல்லப்போனால் நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்குநன்மையாகத்தான் அமையும்.

தானமாக அளித்த இரத்த அளவை, நமது உடல் 24 முதல் 48 மணித்தியாலத்துக்குள் மீண்டும் உற்பத்தி செய்து விடும். இரத்ததானத்தின்போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண் ணிக்கை 56 நாள்களிலேயே சீராகிவிடும். இரத்த தானம் அளிப்பதற்கு எந்தவிதமான உணவுக் கட்டுப்பாடோ, மருந்தோ தேவையில்லை.

உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங் கள் மட்டுமே ஆகும். ஆனால், இரத்த தானம் அளித்த பிறகு 10, 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கச்சொல்லி பிறகுதான் அங்கிருந்து அனுப்புவார்கள். எனவே, மொத்தமாகவே இரத்ததானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும்.

### உலக இரத்த தான தினத்தின் பிரதான குறிக்கோள்கள்:

★ எந்தவொரு வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்ததானத்தை வழங்குவோருக்கு நன்றி செலுத்துதல்.

★ நெருக்கடியான சூழ்நிலையில் உயிர்காக்கும் விலைமதிப்பற்ற வளத்தை ஒழுங்காக வழங்கும் அற்புதமானவிசேடமான தொண்டர் அணியைச் சேர்ந்தவர் என்ற மனநிலையை இரத்ததானம் புரிவோருக்கு ஏற்படுத்துதல்.

★ சுகதேகியாக உள்ள நண்பர்களையும், உறவினர்களையும் எவ்வித வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்தான நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்கமளித்தல்.

★ ஒரு குடும்ப அங்கத்தவருக்கு இரத்தம் தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் இரத்த தானம் செய்தவரை தொடர்ந்தும் இத்தகைய தொண்டர் பணியில் ஈடுபட ஊக்குவித்தல்.

★ இரத்ததானம் செய்வோருக்கு எவ்வாறு சுகமான வாழ்வை மேற்கொள்ள முடியும், எவ்வாறு தமது இரத்தத்தை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பது பற்றி அறிவுறுத்துதல்.

### அன்றாட வேலைகளில் பாதிப்பு இல்லை

இரத்த தானம் அளித்த பிறகும் கூட அவரவர் தங்களது அன்றாட வேலைகளில் எப்போதும் போல் ஈடுபடலாம். எந்த சிக்கலும் இருக்காது.

அறிவியல் வளர்ச்சி கார ணமாக மனிதர்களுக்கு நோயால் ஏற்படும் உயிரிழப்பு வெகுவாக குறைக்கப்பட்டு விட்டது. ஆனால், விபத்துகளால் உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. விபத்து காலங்களில் மனிதன் முதலில் அதிக குருதிப் போக்கை சந்திக்கிறான்.

மருத்துவத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப் வளர்ச்சி காரணமாக குருதி அணுக்கள் பிரிக்கப்பட்டு டெங்கு மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டோர் சிகிச்சைக்கு பயன் படுத்தப்பட்டு வருகிறது. மகப்பேறு காலத்தில் அதிக குருதிப் போக்கால் தாய்மார்கள் உயிரிழப்பதைக் குறைக்கவும் குருதி தேவைப்படுகிறது.

### குருதிக் கொடையின் முக்கியத்துவம்

அறிவியல் வளர்ச்சியால் பல்வேறு சாதனைகளைப் படைத்த மனிதனால் இன்று வரை செயற்கையாக குருதியை உருவாக்க முடியவில்லை. அதனால் தான் குருதியை ஒருவர் உடலில் இருந்து எடுத்து மற்றவர்களுக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. இங்கு தான் குருதிக் கொடை முக்கியத்துவம் பெறுகிறது.

### உடலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது

குருதிக் கொடை வழங்கும் ஒவ்வொருவரும் கதாநாயகன் தான் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. குருதிக் கொடை குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குருதிக் கொடை அளிப்போரை கௌரவிக்கும் வகையிலும் உலக சுகாதார நிறுவனம் கடந்த 2004 ஆம் ஆண்டில் இருந்து ஜூன் மாதம் 14 ஆம் திகதியை உலகக் குருதிக் கொடையாளர் தினமாக அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் மொத்த மக்கள் தொகையில் 18 சதவீதம் பேர் ஆண்டு தோறும் குருதிக் கொடை வழங்குகின்றனர். இந்த வகையில் ஆண்டு தோறும் 10.80 கோடி அலகுகள் குருதிக்கொடையாகப் பெறப்படுகிறது.

> மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. இரத்த தானம் செய்பவர் ஒரு நேரத்தில் 200 முதல் 300 மி.லி. வரை இரத்ததானம் செய்யலாம். அவ்வாறு கொடுத்த இரத்தம் நாம் உண்ணும் சாதாரண உணவில் மீண்டும் உற்பத்தியாகிவிடும். 3 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்த தானம் செய்யலாம்.




### உலகில் நாளாந்தம் மகப்பேறு காலத்தில் 800 தாய்மார் சாவு

உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் 800 தாய்மார்கள் மகப்பேறு காலத்தின்போது ஏற்படும் குருதிப் போக்கால் உயிரிழக்கின்றனர். இதைத் தடுக்க வேண்டுமென்றால் குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்க வேண்டும்.

அன்று முதல் இன்றுவரை இன, மத, மொழி வேறுபாடின்றி உலகெல்லாம் வாழும் அனைத்து மக்களும் மாற்றுக் கருத்தின்றி ஏகமனதாக ஏற்றுக்கொண்ட

> மனிதநேயத்தை சொற்களால் அன்றி குருதி தானத்தால் வெளிப்படுத்துவோம்

ஒரே ஒரு தானம் இரத்ததானமாகும். ஆனால் இன்றைய விஞ்ஞானயுகத்தில் வைத்தியத்துறை அடைந்துள்ள முன்னேற்றத்தின்காரணமாககுருதிதிரவ இழைய தானம், உடல் உறுப்பு தானம் போன்ற தானங்களும் எதிர்பார்த்தளவிற்கு வெற்றியடைந்துள்ளன.

இந்த வெற்றிக்குரிய முக்கியமான காரணம்தானம்செய்யும்கருணையுள்ளம் கொண்ட கொடையாளிகளின் இதயத்தில் இவையும் முக்கிய இடத்தை பிடித்துவிட்டன என்பதேயன்றி வேறு எதுவும் இல்லை.

### அறியாமையை உடைத்தெறிவோம்!

இது தொடர்பில் நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இரத்ததானம் என்பது ஓர் உயிரைக் காக்க நாங்கள் வழங்கும் பங்களிப்பு. இந்த உணர்வை இத்தினத்தில் உறுதியாக எமது மனங்களில் பதித்துக் கொள்வோம்.

இரத்ததானம் செய்கின்றமை பற்றிய அறியாமையை உடைத்து அனைவரும் இரத்த தானம் செய்ய வேண்டும். பிறரைக் கெடுத்து வாழ்வது வாழ்க்கையல்ல கொடுத்து வாழ்வதே வாழ்க்கை.

மனித நேயத்தை சொற்களால் அல்ல இரத்த தானத்தால் வெளிப்படுத்துவோம். ஆகவே தங்களால் இயன்றஅளவு பிறர்க்கு தானம் செய்து வாழ்க!

இரத்த தானம் செய்வீர்!
மனிதாபிமானத்தை வளர்ப்பீர்!

பொன்.வேணு கிருஷ்ணா




2003 ஆம் ஆண்டு ஈராக் படையெடுப்பின் சம யத்தில், மத்திய கிழக்கில் தனது சொந்த பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களைக் கணக்கிட்டு இராணுவ நடவடிக்கையை ஜேர்மனி எதிர்த்தது. அதற்குப் பதிலிறுப்பாய், அப்போது அமெரிக்க பாதுகாப்புச் செயலராக இருந்த டொனால்ட் ரம்ஸ்பீல்ட், பழைய ஐரோப்பா என்று அவர் அழைத்த ஜேர்மனியின் செல்வாக்கு பகுதியாக இருந்ததற்கும், புதிய ஐரோப்பா என்ற அமெரிக்காவை நோக்கி கூடுதலாய் சாய்வு கொண்ட கிழக்கு ஐரோப்பிய அரசுகளுக்கும் இடையில் பேதம் பிரித்துக் காட்டினார்.

அட்லாண்டிக் கூட்டணி தொடர்ந்தும் பராமரிக்கப்பட்ட அதே நேரத்தில், இந்த பிளவுகள் கடந்த தசாப்தத் தின் போது தீவிரப்பட்டு வந் திருக்கின்றன. அமெரிக்காவின் நாசகரமான சர்வதேச பாத்திரம் குறித்து ஜேர்மன் அரசியல் வட்டாரங்களுக்குள் விமர்சனம் பெருகியதோடு உலக அரங்கில் ஜேர்மனி தன்னை நிலைநாட்டிக் கொள்வதற்கான அவசியம் குறித் தும் விவாதிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு -இங்கு ஜேர்மனி கணிசமான பொருளாதார நலன்களைக் கொண்டிருக்கிறது-, சீனா -ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் ஒரே இணைப்பு ஒரே பாதை திட்டத்தில் இருந்து அனுகூலம் பெறுவதற்கு ஜேர்மனி எதிர்பார்க்கிறது-, மற்றும் ரஷ்யா ஆகியவற்றை சூழ்ந்து இந்தக் கருத்துவேறுபாடுகள் அமைந்துள்ளன.

**ஜேர்மன் சமூக ஜனநாயக வாதிகளும், இடதுசாரிக் கட்சியும்**

"நாம் மற்றவர்களை முழுமையாக சார்ந்திருந்த காலங்கள் எல்லாம் முடிந்துவிட்டன" என்றார் மேர்க்கெல். இதிலிருந்து அவர் எட்டிய தீர்மானம், ''ஐரோப்பியர்களாகிய நாம் நிஜமாகவே நமது இலக்கை நமது சொந்தக் கரங்களில் எடுக்க வேண்டும்" மற்றும் ''நமது எதிர்காலத்திற்காக போராட வேண்டும்'', என்றார் மேர்க்கெல்.

ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெலின் அமெரிக்க-எதிர்ப்பு நிலைப்பாடு சகல ஸ்தாபக அரசியல் கட்சிகளாலும் பெரும்பாலான ஊடகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவை, ஜேர்மனியின் ஒரு சுதந்திர வல்லரசுக் கொள்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காக நேட்டோ மற்றும் ஜி7 கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மூர்க்கத்தனமான நடவடிக்கை மீதிருக்கும் கோபத்தைச் சுரண்டி வருகின்றன.

முனீச்சின் ஒரு பீர் கூடாரத்தில் நடந்த பவேரிய கிறிஸ்துவ சமூக ஒன்றியத்தின் (CSU) ஒரு கூட்டத்தில், மேர்க்கெல் அமெரிக்கா உடனான கூட்டணி மீது கேள்வி எழுப்பினார்,





70 ஆண்டுகளுக்கு முன் னர் கூட்டாட்சி குடியரசு நிறுவப்பட்ட தற்குப் பின்னர் இருந்து அது ஜேர்மன் வெளியுறவுக் கொள்கையின் ஆதாரக் கல்லாக இருந்ததாகும். ''நாம் மற்றவர்களை முழுமையாக சார்ந்திருந்த காலங்கள் எல்லாம் முடிந்துவிட்டன'', என்றார். இதிலிருந்து அவர் எட்டிய தீர்மானம், ''ஐரோப்பியர்களாகிய நாம் நிஜமாகவே நமது இலக்கை நமது சொந்த கரங்களில் எடுக்க வேண்டும்,'' மற்றும் ''நமது எதிர்காலத்திற்காக போராட வேண்டும்,'' என்றார்.

"வெளியுறவுத்துறை அமைச்சர் சிக்மார் காப்ரியேல் கூறுகையில், அமெரிக்கா ஒரு முக்கிய தேசத்தை இழந்து வருகிறது. ட்ரம்ப் இன் கீழ், அமெரிக்கா இனி ''மேற்கத்திய சமூக மதிப்பில்'' ஒரு பாத்திரம் வகிக்க முடியாதென அறிவித்தார்.

மேர்க்கெலின் சமூக ஜனநாயக (SPD) கூட்டணி பங்காளி இந்த நிலைப்பாட்டிற்கு அதன் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது. செப்ரெம்பரில் நடக்கவுள்ள கூட்டாட்சி தேர்தலில் மேர்க்கெலை பிரதியீடு செய்து சான்சிலர் ஆவாரென எதிர்பார்க்கப்படும் மார்டின் சூல்ஸ் டுவிட்டரில் குறிப்பிடுகையில், "ஒரு பலமான ஐரோப்பாவே டொனால்ட் ட்ரம்புக்கான சிறந்த பதில்'' என்றார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் சிக்மார் காப்ரியேல் கூறுகையில், அமெரிக்கா ஒரு முக்கிய தேசத்தை இழந்து வருகிறது. ட்ரம்ப் இன் கீழ், அமெரிக்கா இனி "மேற்கத்திய சமூக மதிப்பில்" ஒரு பாத்திரம் வகிக்க முடியாதென அறிவித்தார். ஜி7 உச்சிமாநாடு ''உலகளாவிய அதிகார உறவுகள் மாறுவதற்கான ஒரு சமிக்ஞை" என்று கூறிய அவர், தொடர்ந்து கூறுகையில், ''மேற்கு ஒரு விதத்தில் சுருங்கி வரு கிறது'' என்றார்.




இடது கட்சி, மேர்க்கெல் மற்றும் SPD ஐ மிஞ்ச முயன்றது. அந்தக் கட்சியின் பெண்தலைவர் Katja Kipping, ட்ரம்ப் உடன் ஒரு கடுமையான அணுகுமுறை யைக் கையாள Bild பத்திரிகையில் அழைப்புவிடுத்தார். அமெரிக்காவிற்கு ஆமாம்-சாமிபோடுவதை'' ஜேர்மனி நிறுத்திக் கொள்ள வேண்டுமென அந்தப் பெண்மணி எழுதினார். ''அவர் ஒரு குழந்தைத்தன மான சுயபோகி'' என்பதுதான் "அமெரிக்க ஜனாதிபதியைக் குறித்து அவரால் கூற முடிந்த நேசமான விடயமாக இருந்தது. ட்ரம்புக்கு விடையிறுப்பாக ஐரோப்பா நெருக்கமாக ஒருங்கிணைய வேண்டும் என்பதையும் அவர் சேர்த்துக்கொண்டார்.

மேர்க்கெல் சர்வதேச ஆதரவும் பெற்றார். ஐரோப்பிய ஒன்றிய ஆணைக் குழு தலைவர் ஜோன்-குளோட் ஜூங்கர் இன்னும் அதிக ஐரோப்பிய சுதந்திரத்திற்கும் மற்றும் முடிவெடுக்கும் தன்மைக்கும் அழுத்தமளித்தார். இந்த ஆணைக்குழு ஏற்கனவே இது சம்பந்தமான யோசனைகளை முன்வைத்திருப்பதாக அவரின் செய்தித் தொடர்பாளர் Margaritis Schinas தெரிவித்தார். துல்லியமாக இது, ஐரோப்பா அதன் தலைவிதியை அதுவே தீர்மானிப்பதை உறுதிப்படுத்துவதாகும்'' என்றார்.

ஜனாதிபதி இமானுவல் மக்ரோனைச் சார்ந்துள்ள பிரெஞ் ''பத்திரிகை Le Monde, "ஒருவர் மேர்க்கெலின் முறையீட்டை ஆதரிக்கவேண்டும்," என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டது. பிரிட்டன் வெளியேறுவது மற்றும் அமெரிக்கர்களின் பின்வாங்கல் ஆகியவை ஐரோப்பிய சமநிலையை சீரழித்துள்ளதாக குறிப்பிட்டது. ஆனால் ஜேர்மனி மட்டுமே அளிூவி கண்டத்தின் ஒரே அதிகாரமாக ஆவதை விரும்ப வில்லை.

''அங்கேலா மேர்க்கெல் 'ஐரோப்பியர் களாகிய நாம்' என்று கூறுகையில், அவர் பிரான்ஸை நோக்கிய ஒரு முறையீட்டைக் கொண்டுள்ளார், அமெரிக்கர்களும் பிரிட்டிஷும் துரும்பாக மறைந்து போனால் இதுவே அவரின் ஒரே புகலிடமாக உள்ளது'' என்று அந்தப் பத்திரிகை அறிவித்தது. மக்ரோன் இந்த முறையீட்டுக்கு சாதகமாக விடையிறுக்க வேண்டும், கோலிச ஆதிக்கத்திற்குள் காலங்கடத்தக் கூடாது என்று குறிப்பிட்டது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.


விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



03



## முகவுரை

யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிப்புப் படைகள் அண்மித்தபோது, வலிகாமத்திலிருந்து பொதுமக்கள் அனைவரையும் வெளியேற்றுவதென விடுதலைப் புலிகளின் தலைமை முடிவெடுத்தது. முன்னேறி வந்துகொண்டிருந்த சிங்கள இராணுவத்தின் படையணிகளிடம் சிக்குப்படாமல் தப்புவதற்காக, பீதியும் பதற்றமும் கொண்ட ஐந்து லட்சம் மக்கள் மூச்சுத் திணறும்படி யாழ்ப்பாண வீதிகளை மொய்த்தனர். வலிகாமத்தின் ஒட்டுமொத்தமான குடிசனங்களும் வெளியேறிய பிரமாண்டமான புலப்பெயர்வு மற்றும் சாவகச்சேரியில் இடம்பெற்ற மக்களின் துயரமான வாழ்க்கை போன்ற பேரவலங்களையும் இந்த அத்தியாயத்தில் எடுத்துக் காட்டுகின்றேன். வலிகாமத்திலிருந்து வெளியேறிய ஐந்து லட்சம் மக்களில் நானும் ஒருத்தி. சனநெருக்கடிக்குள் சிக்காமல் ஒரு நாள் முன்பாக வெளியேறியமை தான் வேறுபாடு.

சிங்கள இராணுவம் முன்னேறி ஆக்கிரமிப்பை விஸ்தரிக்க, நாம் குடாநாட்டிலிருந்து வெளியேறி வன்னியில் தஞ்சம் புகுந்தோம். வன்னியில், இடம்பெயர்ந்த மக்களதும் எங்களதும் வாழ்வனுபவங்களைக் கடைசி அத்தியாயத்தில் எடுத்துக்கூறுகின்றேன். இந்த வரலாற்றுக் காலகட்டம், விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் மத்தியில் நிகழ்ந்த கொடிய சமர்களைக் கொண்டதாக அமைந்தது. வன்னிப் பெருநிலத்தை நடுவாக ஊடறுத்துச் செல்லும் கண்டி - யாழ்ப்பாண பெருவீதியைக் கைப்பற்றும் நோக்குடன் 'ஜெயசிக்குறு' என்ற பெயருடன், சிங்கள இராணுவத்தினர் பெரும்படைநகர்வை மேற்கொண்டனர். எனினும், விடுதலைப்புலிகளின் வலுவான எதிர்த் தாக்குதல் காரணமாக அரச துருப்புகளின் இப்படை நகர்வு, தென்னாசிய இராணுவ வரலாற்றிலேயே மிகவும் நீண்டதும் கொடியதுமான சமர்களைக் கொண்ட போராக உருவெடுத்தது.

ஓர் அரசின் அதிகார பீடத்திற்குச் சவால் விடுத்து நின்ற விடுதலை அமைப்பு என்ற ரீதியில், பல்வேறு திறனாய்வாளர்கள் பல்வேறு விடயங்களில் விடுதலைப் புலிகளை கண்டன விமர்சனத்துக்கு இலக்காக்கினர். விடுதலைப் புலிகளின் வளர்ச்சிப் போக்கில், பெண்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தியமையே பலரது புருவங்களை உயர்த்தியது. இந்த விமர்சகர்களில் ஒருவர்தான் ராதிகா குமாரசாமி. பெண்களுக்கு எதிரான வன்முறை என்ற விடயத்தில் ஐ.நாவின் விசேட பிரதிநிதியாக பணிபுரிபவர். இவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையில், விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பற்றி மிகவும் மோசமாக, உண்மைகளைத் திரித்து விமர்சித்து எழுதினார். வன்முறைக்கு எதிரான தனது நிலைப்பாட்டை வலியுறுத்தி, புலிகளின்தலைமைத்துவத்தை கடுமையாகச் சாடினார். பெண்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்திய காரணத்தால் தமிழ்ச் சமுதாயம் இராணுவ மயமாகிவிட்டது எனப் புலிகள் மீது குற்றம் சுமத்தினார். பெண் போராளிகளை வன்முறையாளர்கள் எனவும் சீண்டினார். பெண் புலிகளை ஆயுதம் தரித்த கன்னிகள் எனக் கிண்டல் செய்த ராதிகா குமாரசாமி, பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்குபற்றுகின்றமை தமிழ்ப் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் முற்றிலும் முரணானது எனவும் கண்டித்தார். ஏழாவது அத்தியாயத்தில் ராதிகாவின் கருத்துக்களை அலசி ஆராய்ந்து ஒரு நீண்ட விவரமான விமர்சனத்தை நான் முன்வைத்திருக்கின்றேன். தமிழ்த் தேசிய இனக் கட்டமைப்பில் இணைபிரியாத அங்கமாக பெண்கள் இருக்கிறார்கள். ஆகவே, தமிழினத்தை முழுமையாக அழிக்கும் நோக்கில் ஏவப்பட்ட இனப்படுகொலையை எதிர்கொள்ளும் போது தம்மைப் பாதுகாக்கும் உரிமை பெண்களுக்கு உண்டு என்பதுதான் எனது வாதத்தின் சாராம்சம். தமிழ் மக்கள் எதிர் கொண்ட அரச ஒடுக்கு முறையானது ஒரு நுட்பமான, சூட்சுமமான இன அழிப்பு வடிவம் என்ற வாதத்தை முன்வைக்கும் நான், தமிழ் மக்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறையின் உண்மையான வரலாற்றையும், அந்த ஒடுக்குமுறைக்கு எதிராக அவர்கள் நிகழ்த்தி வரும் வீரம்செறிந்த ஆயுதப் போராட்டத்தையும் ராதிகா குமாரசாமி உதாசீனம் செய்திருக்கின்றமையைக் கண்டித்துள்ளேன். அத்தோடு, பெண்ணியம் சம்பந்தமாக அவர் முன்வைத்த விமர்சனங்களுக்கும்நான்பதிலளித்துள்ளேன்.

முல்லைத்தீவில், புதுக்குடியிருப்பிலுள்ள எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் புலிகள் இயக்கத் தலைவர்கள், குறிப்பாக பிரபாகரன், மூத்த உறுப்பினர்கள் மற்றும் களத் தளபதிகள் ஆகியோர் பற்றிய எனது பார்வையையும் கருத்துகளையும் கடைசி அத்தியாயத்தில் எடுத்துக் கூறுகின்றேன். இருபது ஆண்டுகளுக்கு மேலாக நெருங்கிப் பழகிய அனுபவத்தின் அடிப்படையில் பிரபாகரனது அற்புதமான ஆளுமை பற்றிஎடுத்துச்சொல்லமுயன்றுள்ளேன். தமிழரின் ஆயுதப் போராட்டத்தில் புகழ்மிகு வீரர்களாகக் கௌரவிக்கப்படும் மூத்த களத் தளபதிகள் பற்றியும் எனது கருத்துக்களையும் இங்கு வெளிப்படுத்தியிருக்கின்றேன். சிறுநீரகச் செயலிழப்பால் கடுமையாக நோய்வாய்ப்பட்ட பாலாவை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினதும் நோர்வே அரசினதும் உதவியுடன் வன்னியிலிருந்து வெளியே அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் நூலின் இப்பகுதியில் விவரிக்கின்றேன். பாலாவின் வாழ்க்கைக்கு விலை கூறி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகள் பற்றியும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

பல்வேறு சம்பவங்கள், நிகழ்வுகள் பற்றிய எனது தனிப்பட்ட அனுபவங்களையும், அவதானிப்புகளையும் நினைவுகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டபோதும், சாராம்சத்தில் இந்நூல் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்று இயக்கத்தையே விளக்குகிறது. எனவே இந்நூலை, ஒரு வரலாற்றுப் பதிவேடாகவே கருதவேண்டும். தமிழரின் ஆயுதப் போராட்டத்தின் மிகவும் கொந்தளிப்பான ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களை இந்நூல் பதிவு செய்துள்ளது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு ஏதுமான பல்வகைப்பட்ட சிறப்பம்சங்கள், விளக்க உரைகள், புதிய தகவல்களை கொண்டிருக்கின்றமையால் இந்நூல் வாசகர்களை வெகுவாகக் கவரும் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அரச ஒடுக்குமுறையின் ஆழத்தையும் பரப்பையும் மெய்யுண்மையான சித்திரிப்பாக வெளிக்காட்டுவதே இந்த நூலின் பிரதான நோக்கங்களில் ஒன்று. அரச ஒடுக்குமுறையின் பரிமாணங்களைப் பார்க்கும்போது, அவை இன அழிப்பையே நோக்காகக் கொண்டவை என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். ஆயினும், இந்த விளக்கத்தை உலக அரசுகளும் அன்றி அனைத்துலக மனிதாபிமான நிறுவனங்களும் முழுமையாகப் புரிந்துகொள்ளவோ அன்றி அக்கறையுடன் பரிசீலிக்கவோ மறுத்து வருகின்றன. இனவாத அரசு இழைத்து வரும் கொடுமைகளையும், தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவம் நிகழ்த்தி வரும் அட்டூழியங்களையும், மனித உரிமை மீறல்களையும் இந்தியாவும், மேற்குலக வல்லரசுகளும் உதாசீனம் செய்து வருகின்றமையுடன், அரசியல் சுதந்திரம் வேண்டும் என்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் ஏற்றுக் கொள்ள தொடர்ந்து மறுத்து வருகின்றன.

சுயநிர்ணயம் என்ற தமது நியாய பூர்வமான உரிமைப் போராட்டத்துக்கு எதிர்ப்புகள் கிளர்ந்தபோதும், எத்தகைய பெரிய இடையூறுகளையும்எதிர்கொண்டு தமது அரசியல் இலட்சியத்தை அடைவதில் தமிழீழ மக்கள் உறுதிபூண்டு நிற்கின்றார்கள். இத்தகைய தளர்வுறா மனவுறுதியை, சுதந்திர வேட்கையை தமிழீழத்தில் போராளிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் நான் காணக்கூடியதாக இருந்தது. இச் சுதந்திர வேட்கை இறுதியில் வெற்றி பெறும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

## அத்தியாயம் - 1

### புதிய தரிசனங்கள்

நாம் பிரிய வேண்டிய வேளை வந்துவிட்டமையை உணர்ந்தேன். படகின் வெளி இணை இயந்திரத்தின் விசிறிகள் சுழன்று, சுழன்று, கடலைக் கடைய கடல்நீர் வெண்நுரையாக வழிந்து கொண்டிருந்தது. பதினேழு ஆண்டுகளாக நாம் வாழ்ந்த மண்ணை, நாம் நேசித்த மண்ணை, நாம் கூடிவாழ்ந்த மக்களை விட்டுப்பிரிந்து செல்லும் நேரம் நெருங்கிவிட்டது. கரையிலே எம்மோடு கூடிப் பழகிய விடுதலைப் புலிப் போராளிகள், இளம் பெண்களும், ஆண்களும், பழைய நண்பர்களுமாக எல்லோருமே 'போய் வாருங்கள்' என்று கை அசைத்தபடியே கரைநீளம் நின்றார்கள். நீலம் பாரித்த கரையோர நீர்ப்பரப்பிலிருந்து இந்து மா கடலின் மங்கலான ஆழப் பகுதிக்குள் படகு மெதுவாக எம்மை உந்திச் சென்றபோது, கரையிற் தென்பட்ட மனித உருவங்களும் நீள் கரையோர இயற்கைக் காட்சியும் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. குளமாகிவிட்ட எனது கண்களில், கடலோர நிலப்பரப்பு ஒரு மெல்லிய கறுப்புக் கீறாக மறைந்து கொண்டிருந்தது. என்னில் ஒரு பகுதியை பின்னால் விட்டு விட்டு நான் போய்க்கொண்டிருந்தேன்.

எம்மை எதிர்கொண்டு ஓடி வந்தது இந்துமாகடல். நாம் பிசகான வேளையில் வந்திருக்கின்றோம் என்பதையும், அடுத்துவரும் பலமணிநேரம் வாழ்க்கையே வெறுக்கும் அளவிற்கு நிலைமை மோசமானதாக இருக்கப்போகின்றது என்பதையும் அது தயங்காமல் எமக்கு உணர்த்தியது. வேண்டாத விருந்தாளிகளாக நாம் அந்தப் பரந்த நீர்ப்பரப்பில் நின்றோம். மேலெழுந்து சுழற்றியடித்த அலைகள் வெளிப்படையாகவே தமது சீற்றத்தைக் காட்டின. விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசை, படகின் அணியத்தில் கட்டளை நிலையெடுத்துநின்று, படகைப் பொறுப்போடு நேர்த்தியாகச் செலுத்திக் கொண்டிருந்தார். கொந்தளிக்கும் கடலிலே, சீறியெழும் அலைகளினூடாக சூசையும் அவரது அணியினரும் இலகுவாக படகோட்டும் இலாவகம் கண்டு நான் மரியாதை கலந்த வியப்போடு நின்றேன். வெறியாடும் கடல்மீது தடுமாறிச் செல்லும் படகில் உறுதிதளராது அவர்கள் கால்பதித்து நின்றார்கள். குளிர் நீர் படகு மீது சவுக்கடியாக விழுந்து அவர்களைத் தெப்பமாக நனைத்த போதும் கடமையில் கண்ணாக நின்று செல்லும் திசையின் இலக்கைக் குறி வைத்து படகை நுட்பமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இளம் போராளிகள்தான்.

தொடரும்...

# இத்தாலியில் நடைபெற்ற நிகழ்வில் விடுதலைப் போராட்ட அடையாளங்கள்





இத்தாலி பொலோணியா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற பல்லின மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் தமிழ் இளையோர் அமைப்பினர் இத்தாலி தமிழின அழிப்பும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையையும் வெளிப் படுத்தினார்கள்!

நிகழ்வில் பல்லின மக்களும் இத்தாலிய மக்களும் கலந்துகொண் டார்கள். அனைவரும் தமிழினத் துக்குநிகழ்ந்த இனப்படுகொலையை ஆர்வத்தோடு கேட்டு அறிந்து கொண்டார்கள்.

தமிழ் இளையோர் அமைப்பு உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஓவியக் கண்காட்சிகளுடன் ஈழத்தின் தற்போதைய நிலை மையை விளக்கினார்கள்.

பத்திரிகையாளர்கள், தொலைக் காட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுநல அமைப்புகளுக்கும் தமி ழின அடையாளம், இன அழிப்பு தொடர்பான விடயங்கள் கொண்டு சேர்க்கப்பட்டன.

தமிழ் இளையோர் அமைப்பு இத்தாலியுடன் எதிர்காலங்களில் இணைந்து செயற்பட இச் சந் தர்ப்பத்தில் பல அமைப்புகள் முன் வந்தன. (எ)

# சுவிஸ் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தேர்த்திருவிழா

சுவிஸ் அருள் மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆல யத்தின் மஹோற்சவ திரு விழா தொடர்ச் சியாக இடம் பெற்று வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக தேர்த்திருவிழா பவனி இடம் பெற்றுள்ளது.

சுவிற்ஸர் லாந்தின் பல மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்திருந் தமையுடன் ஆலய வழிபாடு கள் முதல் தேர்த் திருவிழா வரை அனைத்தும் தாயக நினைவுகளை மீட்கும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்தும் 16 ஆவது வருட நிதிசேர் நடைபவனி வெற்றி கரமாக கடந்த 5 ஆம் திகதி நடை பெற்றது. அதன் மூலம் 70 ஆயிரம் கனேடியன் டொலர் நன் கொடையாகப் பெறப்பட்டு நீரிழிவு நோய் கருவி வாங்குவதற்காக ஸ்கார்பாரோ மருத்துவ மனை அறக்கட்ட ளைக்கு நிதி வழங்கப் பட்டது. (எ)

# பிரான்ஸ் தமிழர் வி.க. நடத்திய மெய்வன்மை போட்டிகள்







பிரான்ஸ் தமிழர் விளையாட் டுக் கழகம் 95 வருடாந்தம் நடத் தும் இல்லங்களுக்கு இடையி லான மெய்வன்மைப் போட்டி கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை Garges Les Gonesse பகுதியில் சிறப்பாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை சார்சல் தமிழ்ச் சங்கத் தலைவர் டக்ளஸ் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பிரான்ஸ் தமிழர் விளையாட் டுத்துறை உதவிப் பொறுப் பாளர் செல்வா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து 95 விளை யாட்டுக் கழகக் கொடியை தமிழர் விளையாட்டுக்கழகம் 95 இன் பொறுப்பாளர் யூட்ஸ் றமேஷ் ஏற்றிவைக்க, இல்லக் கொடிகள் ஏற்றப்பட்டன.

பாரதி இல்லம், காந்தி இல்லம், அன்பு இல்லம், குரு குலம் இல்லம் ஆகிய 4 இல்லங்களினதும் கொடிகளை அவற்றின் பிரதிநிதிகள் ஏற்றி வைத்தமையைத் தொடர்ந்து ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டது.

ஒலிம்பிக் தீபத்தை பொன்ராஜ் குகராஜ், திருமதி வின்ஸ்ரன் தயாநிதி ஆகிய இருவரும் ஏற்றிவைத்தனர்.

விளையாட்டு வீரர்களின் சத்தியப் பிரமாணத்தைத் தொடர்ந்து இல்லங்களின் அணிநடை இடம்பெற்றது.

தொடர்ந்து பிரதம விருந் தினர்கள் போட்டிகளை ஆரம் பித்து வைத்தனர். இல்லங் களுக்கிடையே போட்டிகள் விறுவிறுப்பாக இடம்பெற்றன. ஒவ்வொரு போட்டிகளின் நிறைவிலும் வெற்றிபெற்ற வர்களுக்கான சான்றிதழ்களும் நினைவுப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இல்லங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டி மிக வும் விறுவிறுப்பாக இடம்பெற் றது. சிறுவர்களுக்கான ஓட்டப் போட்டிகளும், பெரியவர்களுக் கான வேக நடைப் போட்டி களும் சிறப்பாக அமைந்திருந் தன.

சிறப்பு விருந்தினர்களாக சார்சல் நகர பிதா பிரான்சுவா சார்சல், துணை நகர பிதா Monsieur Patrick Angrevier சார்சல் நகர விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் முஸ் தபா மொக்தறி ஆகியோருடன் பிரான்ஸ் தமிழர் ஒருங்கி ணைப்புக்குழு மற்றும் அதன் உப கட்டமைப்புக்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகி யோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் சான்றி தழ்களையும் பதக்கங்களையும் வழங்கி மதிப்பளிப்புச் செய் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜூன். 14

யாழ்ப்பாண மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட பாதிக்கப்பட்ட தொண் டர் ஆசிரிய சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் நேர்முகத் தேர்வு தொடர்பான விவரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ)

# பொதுபலசேனாவை உருவாக்குவதற்கு மஹிந்த, கோட்டா இருவருமே உதவினர்!

## திஸ்ஸ விதாரண கருத்துக்கு சம்பிக்க ரணவக்க கண்டனம்



பொதுபல சேனாவை உருவாக்குவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே. உதவினர்.

-இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சரும், லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரை சம்பிக்கவே மறைத்து வைத்திருக்கின்றார் என அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

என்னிடம் கேட்ட கேள்வியை ராஜபக்ஷ சகோதரர்களிடம்தான் திஸ்ஸ விதாரண கேட்க வேண்டும்.

ஒரு காலத்தில் மிகச் சிறந்த முக்கிய கட்சிகளாகத் திகழ்ந்து தற்போது அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள அரசியல் கட்சிகளின், அரசியல் அநாதைகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க எனக்கு நேரமில்லை.

மஹிந்த, கோட்டாபயவிடம் இது பற்றிக் கேட்க முடியாவிட்டால் அவர்களின் சார்பில் கடந்த காலங்களில் வழக்குகளில் முன்னிலையாகிய சட்டத்தரணிகளிடம் இதனைக் கேட்கலாம். ஜனாதிபதித் தேர்தல்காலத்தில் திஸ்ஸ விதாரண இந்தக்குற்றவாளிகளுடனேயே இருந்தார். -என்றார். (ச)

# கைதடி,நாவற்குழியில் ஒரே சமயத்தில் இரு பாலங்களின் நிர்மாணப் பணிகள்!

## இரவு வேளையிலும் பணியாளர்கள் கடமையில்!!


ஏ9 வீதியில் நாவற்குழி மற்றும் கைதடிப் பாலங்கள் இரண்டும் - ஒரே சமயத்தில் - புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய பாலங்களுக்கு அருகிலேயே இந்த இரு பாலங்களும் நிர்மாணிக்கப்படுகின்றன. அவை அகலம் கூடியனவாகவும் 'கொங்கிறீட்' பாலங்களாகவும் நிறுவப்படுகின்றன என்று கூறப்பட்டது.

இரு பாலங்களினதும் நிர்மாணப் பணிகள் தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. கைதடிப் பாலத்தில் இரவிலும் கூட பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கின்றமையைக் காணக் கூடியதாக இருக்கிறது. இராட்சத பாரம் தூக்கிகள் மற்றும்கனரக வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. நாவற்குழி பாலத்துக்கு அருகில் தற்காலிக மாற்றுப்பாதை ஒன்று அமைக்கப்பட்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (இ)







# அனைவரையும் கவர்ந்த போராளி

**யாழ்** மாநகர சபை உறுப்பினர் அமரர் த. சுபத்திரனின் (தோழர் றொபேட்) 14 ஆவது நினைவுதினம் இன்றாகும். தமிழ் மக்களது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கானஆயுதப்போராட்டத்தில் தனது 24 ஆவது வயதில் இணைந்துகொண்டசுபத்திரன் 46 ஆவது வயதில் இறக்கும் வரை அதே குறிக்கோளுடன் உழைத்தவர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த அவரது தந்தை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர், தாயார் உடுப்பிட்டியைச்சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகளில் இளையவரான சுபத்திரன் இறுதியாக யாழ். மத்திய கல்லூரியில் க.பொ.த உயர் தரத்தில் கல்விகற்றார். அவருக்கு மூத்தவரான அவரது சகோதரி ஒருமிருகவைத்தியர். சுபத்திரனின் குடும்ப சூழல் போராட்டத்தில் பங்கேற்பதற்கான எந்த நெருக்குதல்களையும் அவருக்கு வழங்கவில்லை.

1983 ஜூலை இனக் கலவரத்தால் ஏற்பட்ட கொந்தளிப்பிற்கு முன்னதாகவே போராட்டதில் தன்னை இணைத்துக் கொண்டவர் சுபத்திரன். தன்னைச் சூழவுள்ள சகமனிதர்களின் துன்பங்கள், பிரச்சினைகளில் கொண்ட அக்கறைதான் அவர் ஒருபோராளியாகப் பரிணமிக்கக் காரணமாயமைந்தது.

அவருக்கிருந்த சமூக ஈடுபாடும், தேடலும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய சாதிரீதியான அடக்குமுறைகள், அநீதிகள், தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழும் இன ரீதியானபாரபட்சங்கள், மனிதனை மனிதன் சுரண்டும் வர்க்கரீதியான ஏற்றத்தாழ்வுகள், மக்களின் துயரங்களுக்கான உண்மையான காரணங்களைக் கண்டுகொள்ளவிடாமல் தடுக்கும் மூட நம்பிக்கைகள் என அனைத்துத் தளைகளிலிருந்தும் தமிழ் மக்கள் விடுவிக்கப்படுகின்றமை உண்மையான விடுதலைக்கு வழி என நம்பினார். அதற்காகவே அயராது செயற்பட்டார்.

இவை அனைத்தும் ஒரு சிறந்த போராளியாக அவர் இனங்காணப்படவும்தலைமைஸ்தானத்துக்குத் தெரிவு செய்யப்படவும் காரணமாய் அமைந்தன. அவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட இராணுவப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார். தோழர் ரஞ்சன் என எல்லோருக்கும் அறிமுகமானார்.

1985 மார்ச் 18 ஆம் திகதி குருநகர் 5 மாடி வீடமைப்புத் திட்டத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். யாழ். கோட்டை, ஆனையிறவு போன்ற இராணுவமுகாம்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாகி பின்னர் வெலிக்கடை மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் சிறையில் இருந்தபோதும் கைதிகளின் நலன் காக்க முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்களில் சககைதிகளுடன் அவரும்முன்னணியில்இருந்து செயற்பட்டார். இயக்கங்களிடையே உருவான மோதல் நிலை சிறைச்சாலையின் உள்ளேயும் பரவாமல் அதனால் எந்த ஒருகைதியும் பாதிக்கப்படாமல் நிலைமையை சுமுகமாகப் பேணியதில் சுபத்திரனின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1987 ஜூலை 29 இல் கைச்சாத்தான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட பல்வேறு போராளி இயக்கங்களையும் சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களில் ஒருவராக விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் உடனடியாக சொந்த இடங்களுக்குச்செல்ல முடியாத நிலையில் அவர்களின் தங்குமிடம், உணவு, போக்குவரத்துபோன்றவற்றை ஏற்பாடுசெய்வதிலும் அவர்களின் பாதுகாப்பு குறித்தும் இதர இயக்கங்களைச் சோந்தவர்களுடன் இணைந்து முன்நின்றுசெயற்பட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் பிரதிநிதித்துவம் வகிக்காத போதும் மாகாண சபையை பாதுகாப்பதற்கும், ஒரு கருத்தின், கொள்கையின் அடிப்படையில் அமைப்பாகச் செயற்படுவதற்கிருந்த தடைக்கு எதிராக குறித்த அடிப்படை ஜனநாயக உரிமையை நிலை நிறுத்துவதற்காகவும் விட்டுக் கொடுப்பின்றி போராடினார்.

1998இல் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினராகப் பதவி ஏற்றுக்கொண்ட சுபத்திரன் தனதுபதவிக்காலம் முடியும் வரை மாநகரசபையின் பணிகளில் காத்திரமான பங்கை வகித்தவர். யாழ்.மாநகரசபையின் ஆளுந்தரப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி பொறுப்பேற்றிருந்த நிலையில் சரோஜினி யோகேஸ்வரன், பொன்னுத்துரை சிவபாலன், நடராஜா ரவிராஜ், செல்லன் கந்தையன் ஆகிய நான்கு மாநகர முதல்வர்களினதும் செயற்பாடுகளுக்கு பக்கபலமாயிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இல் இணைந்ததில் இருந்து யாழ். நகரிலிருந்த கட்சிஅலுவலகத்தில் 14 ஆம் திகதி 06 ஆம் மாதம் 2003 ஆம் ஆண்டு அன்று துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகும் வரை தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவும், தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்துவதற்காகவும் ஆயுதம் தாங்கியும், ஜனநாயக வழிமுறைகளுக்கூடாகவும் போராடியமையுடன் கட்சியின் வளர்ச்சிக்கும், தோழர்களின் நலன் பேணவும் இடையறாது செயற்பட்டவர். அதுவே காலங்களை வென்று எம் சமூகத்தில் சுபத்திரனின் (தோழர் றொபேட்) பெயர் நிலைத்திருக்கவும் நினைவு கூரப்படவும் காரணமாகும்.

**யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுபத்திரனின் 14 ஆவது நினைவு தினம் இன்றாகும்.**

— கே.எஸ்.மோகன்

## பன்னீர் அணிக்குச் செல்லாமல் தடுப்பதற்காக

# சசி அணியினர் கோடிக்கணக்கில் பேரம்: விலை போனார்கள் எம்.எல்.ஏக்கள்?

அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்களை சசிகலா அணியில் இருந்து பன்னீர் அணிக்குச் செல்லாமல் தடுப்பதற்காக அவர்களுக்குக் கோடிக்கணக்கில் பேரம் பேசப்பட்டது என மதுரை மேற்கு தொகுதிச் சட்டசபை உறுப்பினர் சரவணன் பேசும் காணொலிக் காட்சிகளைத் தனியார் ஆங்கிலச் செய்தித் தொலைக்காட்சியான 'டைம்ஸ் நவ்' அம்பலப்படுத்தியுள்ளது. இதனால், தமிழகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. கட்சித் தலைவராக சசிகலா தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், அவருக்கு எதிராக ஓ.பன்னீர் செல்வம் போர்க்கொடி உயர்த்தினார். இதனால்,சட்ட சபை உறுப்பினர்கள் ஓ. பன் னீர் செல்வம் அணியின் பக்கம் மாற தொடங்கினர். இதனைத் தடுப்பதற்காக அ.தி. மு.க. சட்டசபை உறுப்பினர் கள் அனைவரும் காஞ்சிபுரம் மாவட்டம் கூவத்தூரில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை சுமார் 10 நாள்கள் தங்க வைக்கப்பட்டனர். 'சட்டசபை உறுப்பினர்கள் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அந்த விடுதியில் அடைத்து வைக்கப்பட்டனர் எனப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இதுதொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது.

இந்த நிலையில், பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி தமிழகச் சட்டப்பேரவையில் முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீது நம்பிக்கை வாக்கெடுப்புக்கான பேரவைச் சிறப்புக்கூட்டம் இடம்பெற்றது. இதற்காக நட்சத்திர விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் அமைச்சர்களின் காரில் பலத்த பாதுகாப்புடன் பேரவைக்கு அழைத்து வரப்பட்டனர். இதனை அடுத்து, அவர்கள் தங்கியிருந்த தனியார் நட்சத்திர விடுதி தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்த நிலையில், டைம்ஸ் நவ் தொலைக்காட்சி அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்களை கூவத்தூர் நட்சத்திர விடுதியில் தங்க வைத்து சசிகலா அணியினர் பேரம்பேசியமை தொடர்பான காணொலியை வெளியிட்டுள்ளது. கூவத்தூர் நட்சத்திர விடுதியில் இருந்து தப்பி வந்து, பன்னீர் அணியில் இணைந்த மதுரை தெற்கு சட்டசபை உறுப்பினர் சரவணன் பேசிய காணொலியே வெளியிடப்பட்டுள்ளது.

சட்டசபை உறுப்பினர் சரவணன் பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

'புறப்படும்போது 2 கோடி ரூபா தருகிறோம் எனக் கூறினார்கள். பின்னர், அது 4 கோடி

**'டைம்ஸ் நவ்' ரிவி காணொலி அம்பலம்**

ரூபா ஆனது. இறுதியில் கூவத்தூர் விடுதியை அடைந்தபோது 6 கோடி ரூபா ஆகிவிட்டது எனக் கூறினார்கள். என்னடா, இது கூடிக் கொண்டே போகிறது என்று நினைத்தேன். பின்னர், பணமாகக் கொடுக்க முடியாது. அதனால் தங்கக்கட்டிகளாக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள். பணமாகக் கொடுத்தாலும் தங்கம்தான் வாங்கப் போகிறோம்; தங்கமாகவே கிடைத்துவிட்டால் நல்லது தானே என்று வீட்டுக்குத் தொடர்பு கொண்டு தகவலை சொல்லிவிட்டேன் இதில், காங்கேயம் தொகுதிச் சட்டசபை உறுப்பினர் தனியரசு, நாகப்பட்டினம் தொகுதிச் சட்ட சபை உறுப்பினர் அன்சாரி மற்றும் சட்டசபை உறுப்பினர் கருணாஸ் ஆகியோர் 10 கோடி ரூபா லஞ்சம் பெற்றனர். மற்றவர்களுக்கு ஒரு கோடி ரூபா கூடக் கிடைக்கவில்லை' என்று எம்.எல்.ஏ. சரவணன் வருத்தமாகப் பேசியமை மூன் டி.வி. நிர்வாக இயக்குநருடன் கூவத்தூரில் நடந்தது தொடர்பில் பேசும் காணொலி வெளியாகியுள்ளது.

சமூக வலைத்தளங் களில் அதிகம் பரப்பப்பட்ட அந்தக் காணொலி 'வைரலாக' பரவி அகில இந்தியா அளவில் பிரபல்யமாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

அந்நிய செலாவணி வழக்கு:

## சசி காணொலி மூலம் விசாரிக்கப்படுவார்!



அந்நிய செலாவணி மோசடி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சசிகலாவை எதிர்வரும் 21 ஆம் திகதி காணொலி மூலம் விசாரணை செய்ய எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு சென்னை எழும்பூரில் உள்ள பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் இந்த வழக்கில், குற்றம் சுமத்தப்பட்ட சசிகலா, பாஸ்கரன் ஆகியோரிடம் குற்றச்சாட்டு பதிவு செய்ய எழும்பூர் நீதிமன்றம் முடிவு செய்தது. இதற்காக இருவரையும் நேரில் ஆஜராகும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சசிகலா, உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளமையால், தன்னால் நேரில் ஆஜராக முடியாது என்றும் காணொலிக் காட்சி மூலம் தன்னிடம் குற்றச்சாட்டு பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இதனால், அவரிடம் காணொலிக் காட்சி மூலம் விசாரிக்க நீதிமன்றம் முடிவு செய்தது. இதற்கிடையில், சசிகலா மற்றொரு மனுவைத் தாக்கல் செய்தார். அதில், 'குற்றச்சாட்டு பதிவு செய் வதற்காக தன்னிடம் கேட்கப்படும் கேள்விகளை முன்கூட்டியே தரவேண்டும்' என்று கூறியிருந்தார். இதற்கு அமலாக்கப் பிரிவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இதையடுத்து, சசிகலா தாக்கல் செய்த இந்த மனுவை எழும்பூர் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தள்ளுபடி செய்தது. இந்த நிலையில், மேற்படி வழக்கு நீதிபதி ஜாகீர் ஹுசேன் முன்னிலையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

வெளிநாடுகளில் இருந்து ஜெ.ஜெ. தொலைக்காட்சி நிறுவனத்துக்கு இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்யும்போது, அந்நியச் செலாவணி மோசடி செய்தனர் என சசிகலா, பாஸ்கரன் ஆகியோர் மீது 1996 ஆம் ஆண்டில் அமலாகத் துறை வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அ.தி.மு.கவின் முறைகேடான செயலால் பலியாக்கப்படுகிறது இந்திய ஜனநாயகம்!

### குற்றஞ்சாட்டுகிறார் ஸ்டாலின்



பணத்தால் எதையும் விலை பேசிவிடலாம் என்ற அ.தி.மு.கவின் முறைகேடானவழிமுறைக்கு ஜனநாயகம் பலியாக்கப்பட்டிருக்கிறது.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தி.மு.க. செயல் தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்களை பன்னீர் அணிக்கு செல்லாமல் தடுக்கக் கோடிக் கணக்கில் பேரம் பேசப்பட்ட விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள அ.தி.மு.கவின் அணிகளுக்கிடையே நடந்த போட்டியும், பேரமும் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளன. எடப்பாடி பழனிச்சாமியின் அரசு, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்றுள்ளது ஊழல் பணத்தில் செய்த "கொள்முதல்" என்று ஏற்கனவே வெளியான செய்தி, இப்போது உறுதியாகியுள்ளது.

ஊரார் பார்வைக்கு உத்தமர்கள் போல வேடம் போட்டுக்கொண்டு ஆன்மா, தியானம், தர்மயுத்தம் என வார்த்தைக்கு வார்த்தை வண்ணம் பூசியவர்களும், சமாதியில் சபதம் செய்தவர்களும் எந்தளவுக்கு மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை அவர்களுக்குள் அணிகள் பிரிந்து அதிகாரத்துக்குப் போட்டியிடும்போது பணத்தால் எம்.எல்.ஏக்களையும் பின் எம்.பிக்களையும் பேரம் பேசுவது புதியதல்ல. முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் மரணத்துக்குப் பின் ஜா. அணி, ஜெ. அணி என இரண்டு அணிகளாக பிரிந்து நின்றபோது, ஜெ. அணி சார்பில் தனக்கு விலை பேசப்பட்டமையை நாடாளுமன்றத்திலேயே பணப்பெட்டியைத் திறந்து காட்டி அம்பலப்படுத்திய அ.தி.மு.க. எம்.பியின் கதை நாடறிந்ததுதான். அதே வழியில்தான் 30 ஆண்டுகள் கழித்தும் அ.தி.மு.க. அணிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. (ச)

## 'சினிமா' செல்லும் பெண் வேண்டாம்!

### மகன்களுக்கு பெண் தேடுகிறார் பீஹார் முன்னாள் முதலமைச்சரின் மனைவி

'அடிக்கடி சினிமாவுக்கும் ஷொப்பிங் மாலுக்கும் செல்லும் பெண்கள் வேண்டாம்' என்று தனது மகன்களுக்கு பெண் தேடும் பீஹார் முன்னாள் முதலமைச்சரின் மனைவி ராப்ரி தேவி முன்வைத்துள்ள நிபந்தனை இது.

பீஹார் முன்னாள் முதல்வரும் ராஷ்டிரிய ஜனதா தள கட்சியின் தலைவர் லாலு பிரசாத் யாதவின் மனைவியுமான ராப்ரி தேவி தனது மகன்கள் தேஜ் பிரதாப் யாதவ், தேஜஸ்வி பிரசாத் யாதவ் ஆகிய இருவருக்கும் குடும்பப்பாங்கான மணமகள் தேவை எனத் தெரிவித்துள்ளார்.

அண்மையில், லாலு பிரசாத் யாதவின் 70 ஆவது பிறந்தநாள் விழா நடந்தது. இதன்போதே ராப்ரி தேவி இவ்வாறு தெரிவித்துள்ளார். தேஜ் பிரதாப் யாதவ், தேஜஸ்வி பிரசாத் யாதவ் ஆகிய இருவருமே அமைச்சர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## பிரதமர் மோடி அமெ. பயணம்!



இந்திய பிரதமர் மோடி எதிர்வரும் 25 ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார். இந்த விஜயத்தின்போது அவர் அந்த நாட்டு அதிபர் டொனால்ட் ட்ரம்பை சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். அதைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியை அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அமெரிக்காவுக்கு வரும்படி ட்ரம்ப் அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்றுப் பிரதமர் மோடி அமெரிக்கா செல்கிறார். மறுநாள் 26 ஆம் திகதி இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.



## சீனா – பனாமா இடையே புதிய கூட்டு உடன்பாடு!

சீனாவுக்கும் பனாமாவுக்கும் இடையே இராஜதந்திர ரீதியிலான உறவை நிலைநாட்டும் வகையில் இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களிடையே கூட்டு உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

சீனாவுக்கும், பனாமுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம், தாய்வானுடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொள்ளப் போவதாகவும், எதிர்வரும் காலங்களில் தாய்வானுடன் உத்தியோகப்பூர்வ உறவையோ அல்லது அதிகாரபூர்வ பரிமாற்றங்களையோ மேற்கொள்ளப் போவதில்லை என்றும் பனாமா அறிவித்துள்ளது.

பனாமாதுணைஜனாதிபதி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோருக்கும், சீன அமைச்சர் வோங் யீ-இற்கும் இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இறையாண்மை மற்றும் பிராந்தியஒருமைப்பாட்டுக்கான பரஸ்பரமரியாதைக்கொள்கைகளின் அடிப்படையில், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது, சமத்துவம், பரஸ்பர நன்மை மற்றும் சமாதான மானசகவாழ்வு என்பவற்றின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையேநட்புறவை வளர்த்துக் கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, முழு சீனாவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டபூர்வ அரசாக சீனாவே விளங்குகிறது. தாய்வான் என்பது சீனாவின் எல்லையில் உள்ள ஒரு பகுதியே என்பதைப் பனாமா அங்கீகரித்துள்ளது. (ச)

## பனாமாவுக்கான உதவிகளை நிறுத்தியுள்ளது தாய்வான்!

### கூட்டு உடன்படிக்கையின் எதிரொலி

பனாமாவுடனானஒத்துழைப்புகளையும், பனாமாவுக்கான உதவிகளையும்உடனடியாகநிறுத்திக் கொள்கிறோம் எனத் தாய்வான் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் லீ அறிவித்துள்ளார்.

தாய்வானுடனான இராஜதந்திரஉறவுகளை முறித்துக்கொண்டு அதற்குப் பதிலாக பனாமா, சீனாவுடன் இராஜதந்திர உறவை நிலைநாட்டியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த தாய்வான் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அத்துடன், பனாமாவிலுள்ள தாய்வான் தூதரக அதிகாரிகளையும், தொழில் நுட்ப நிபுணர்களையும் உடனடியாக நாட்டுக்கு அழைக்கவுள்ளோம் எனத் தாய்வான் தெரிவித்துள்ளது.

சீனாவுக்கும் பனாமுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளகூட்டு உடன்படிக்கையின் பிரகாரம், தாய்வானுடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொள்ளப்போகிறோம் எனப் பனாமா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பங்களாதேஷில் பெரும் மண் சரிவு!

## 43 பேர் புதையுண்டு சாவு!!



டாக்கா, ஜூன் 14

பங்களாதேஷில் கடுமையான மழை காரணமாகஏற்பட்ட மண்சரிவில் சிக்கி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 43 பேர் உயிரிழந்தனர் என பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்தனர்.

வங்காள விரிகுடா கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக பங்களாதேஷின் பல இடங்களிலும்கனமழைபெய்து வருகின்றது. இதனால், டாக்கா மற்றும் சிட்டகாங் நகரங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. இதன் காரணமாக ஆங்காங்கே மண் சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. இதில் ரங்காமத் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மீட்புப் பணி வீரர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். பந்தர்மன் மாவட்டத்தில் 5 பேர் உயிரிழந்தனர். வேறு இடங்களிலும் ஆங்காங்கே மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. நேற்றுப் பிற்பகல் கிடைத்த தகவலின் படி 43 பேர் பலியாகி இருந்தனர். மேலும் பலர்காயமடைந்துள்ளனர்.



மண்சரிவு ஏற்பட்டுள்ள இடங்களில் மீட்புப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்று வங்கதேச தேசிய பேரிடர் துறை தெரிவித்துள்ளது. (ச)

## இஸ்லாம் மதத்தை பழித்தவருக்கு பாகிஸ்தானில் மரண தண்டனை!



பாகிஸ்தானில் முதன்முறையாக இஸ்லாம் மதத்தை பழிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தார் எனக்கூறி சிறுபான்மை (ஷியா) பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குத் தீவிரவாதத் தடுப்பு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

ஒகாரா நகரைச் சேர்ந்த தைமூர் ரசா (வயது -30) என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் இஸ்லாம் மதத்தை பழிக்கும் வகையில் முகநூலில் கருத்து தெரிவித்தார் என, இவருடன் பணிபுரிந்தவர்கள் கடந்த ஆண்டு முறைப்பாடு செய்தனர். இதன் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, தைமூர் ரசா மீது பஹவல்பூர் மாவட்ட தீவிரவாத தடுப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. விசாரணை நடந்து முடிந்த நிலையில் தைமூருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி ஷபிர் அகமது கடந்த சனிக்கிழமை தீர்ப்பு வழங்கினார். இதற்கு வலதுசாரி அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் இணையத் தளக் குற்றம் தொடர்பான வழக்குகளில் இதுவரை வழங்கப்பட்ட தண்டனைகளில் இது மிகவும் கடுமையானது ஆகும். மேலும் மதநம்பிக்கையை பழித்த குற்றத்துக்காக ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். (ச)

## புதிதாகக் கண்டறியப்படும் கிரகத்துக்கு இந்திய மாணவி சாஹிதியின் பெயர்!

விண்வெளியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கிரகத்துக்கு இந்திய மாணவி ஒருவரின் பெயர் சூட்டப்படும் என்று லிங்கன் அறிவியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது. கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த 16 வயதுடைய சாஹிதி பிங்காலி என்ற மாணவியின் பெயரே புதிய கிரகத்துக்கு சூட்டப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


அண்மையில் அமெரிக்காவின் மாசசூசட்ஸ் லிங்கன் ஆய்வகம் நடத்திய சர்வதேச அறிவியல் மற்றும் பொறியியல் கண்டுபிடிப்பு போட்டியில் சாஹிதி பங்கேற்றிருந்தார். இந்தப் போட்டியில் சாஹிதி சமர்ப்பித்த ஆய்வு அறிக்கையை ஏற்றுக் கொண்ட மாசசூசட்ஸ் லிங்கன் ஆய்வகம், சாஹிதியின் கண்டுபிடிப்பை கௌரவிக்கும் விதமாக விண்வெளியில் கண்டு பிடிக்கப்படும் கிரகத்துக்குச் சாஹிதியின் பெயர் வைக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

### தீவிரவாதத்துக்கு கண்டனம்; லண்டன் மேம்பாலத்தில் நின்றவாறு

## 3 ஆயிரம் ரோஜாக்கள் வழங்கி நெகிழவைத்த முஸ்லிம்கள்!

பிரிட்டனில் தீவிரவாதத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும், பிற மதத்தினர் மீது அன்பை வெளிப்படுத்தும்வகையிலும்லண்டன் மேம்பாலத்தில் நின்றபடி வழிபோக்கர்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் முஸ்லிம் மக்கள் மூவாயிரம் ரோஜா மலர்களை வழங்கி அனைவரையும் நெகிழ வைத்தனர்.

சிரியாவில் பயங்கர வன்முறையில் ஈடுபட்டுவரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரித்தானியா உட்பட பல நாடுகளில் தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டியுள்ளனர்.





பிரித்தானியாவில் உள்ள லண்டன்பாலத்தில் அண்மையில் பாதசாரிகள் மீது வாகனத்தை ஏற்றி 3 தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 8 பேர் உயிரிழந்தனர்.

இதேபோல், மான்செஸ்டர் நகரில் நடந்த இசை நிகழ்ச்சியின்போது மனித வெடிகுண்டுத்தாக்குதல்நடத்தப்பட்டது. இதில் 22 பேர் உயிரிழந்தனர். அடுத்தடுத்து நடந்த இந்தச் சம்பவங்களால் பிரித்தானியா முழுவதும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஜாக்கியா பஸ்ஸாவ் தெரிவிக்கையில்-

''தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களது அன்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தோம். லண்டன் மேம்பாலத்தை மட்டுமல்ல, எந்தவொரு மேம்பாலத்தையும் தகர்க்க விடமாட்டோம் என்பதையும் இதன்மூலம் வெளிப்படுத்தி வருகிறோம்.'' - என்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு பிரித்தானியாவில் உள்ள ஒட்டுமொத்த முஸ்லிம் அமைப்புகளும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. அத்துடன், மேம்பாலத்தின் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் இறுதிச் சடங்குகளை, இஸ்லாமிய முறைப்படி நடத்துவதற்கும் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# மிகவும் மோசமான களத் தடுப்பினாலேயே அரையிறுதி வாய்ப்பை இழந்தது இலங்கை!

லண்டன், ஜூன் 14

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின், அரையிறுதிப் போட்டிகளில் விளையாடவுள்ள குழு 'பி' இலிருந்தான மேலதிக அணி யார் என்பதனை தீர்மானிக்கும், இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியில் 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றிருக்கும் பாகிஸ்தான் அணி குழு 'பி' இல் இருந்து இந்திய அணியுடன் சேர்த்து அரையிறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.



கார்டிப் நகரில் ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணித்தலைவர் சர்பராஸ் அஹ்மட் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இலங்கை அணியைத் துடுப்பாடுமாறு பணித்திருந்தார்.

இதன்படி, நிரோஷன் திக்வெல்ல மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோருடன் மைதானம் விரைந்திருந்த இலங்கை அணி நிதானமான ஆரம்பத்தையே வெளிப்படுத்தியிருந்தது. இந்நிலையில் தொடக்க வீரர்களில் ஒருவராக வந்திருந்த தனுஷ்க குணதிலக்க இடது கை வேகப் பந்து வீச்சாளரான ஜூனைத் கான் மூலம் இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக ஓய்வறை அனுப்பப்பட்டார். இதனால், அவரது இன்னிங்ஸ், குறுகிய ஓட்டங்களுடன் முடிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து, களத்திற்கு வந்த குசல் மெண்டிஸ், களத்தில் நின்றிருந்த திக்வெல்ல உடன் இணைந்து இரண்டாம் விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில், ஹசன் அலியின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டிருந்தார். ஆட்டமிழக்கும் போது, மெண்டிஸ் 29 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனை அடுத்துக் களத்திற்கு நுழைந்த தினேஷ் சந்திமால் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்க, ஒரு கட்டத்தில் சடுதியாக இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்திருந்த இலங்கை அணி, 83 ஓட்டங்க்ளுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து சற்று தடுமாறத் தொடங்கியது.

எனினும், களம் நுழைந்த அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அழுத்தங்களை நுட்பமாக எதிர்கொண்டு அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியிருந்தார்.

மத்தியூஸின் உதவியுடன் இலங்கை அணியின் நான்காம் விக்கெட்டுக்காக, 78 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்டதுடன் மொஹமட் அமீரின் பந்து வீச்சில் ஓய்வறைக்கு அனுப்பப்பட்ட மத்தியூஸ், 2 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 54 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

மத்தியூஸின் விக்கெட்டைத் தொடர்ந்து, பாகிஸ்தான் அணியின் அபாரப் பந்துவீச்சினால் இலங்கை அணியின் 3 விக்கெட்டுகள் வெறும் ஆறு ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட ஒரு கட்டத்தில், இலங்கை அணி 167 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும், களத்தில் நின்ற அசேல குணரத்ன மற்றும் சுரங்க லக்மால் ஆகியோரின் நிதானமான இணைப்பாட்டத்துடன், 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த இலங்கை அணி 236 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில், அதிகபட்சமாக நிரோஷன் திக்வெல்ல 86 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களையும், பின்வரிசையில் அணியை பெரிய சரிவிலிருந்து மீட்டெடுத்த அசேல குணரத்ன பெறுமதிமிக்க 27 ஓட்டங்களையும், சுரங்க லக்மால் 26 ஓட்டங்களையும் பெற்றுத்தந்தனர். சிறப்பான பந்து வீச்சினை வெளிக்காட்டியிருந்த பாகிஸ்தான் அணியில், ஜூனைத் கான், ஹசன் அலி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளையும், மொஹமட் அமீர் மற்றும் இந்தப் போட்டியின் மூலம் அறிமுகமாகிய பாஹிம் அஷ்ரப் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து வெற்றி இலக்காக, நிர்ணயிக்கப்பட்ட 237 ஓட்டங்களைப் பெற பதிலுக்கு துடுப்பாடிய பாகிஸ்தான் அணி, ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பக்கர் சமானின் அதிரடி ஆட்டம் மூலம், சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணியின் முதல் விக்கெட்டாக பறிபோயிருந்த, சமான் 36 பந்துகளில் 8 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் சீரான இடைவெளிகளில் பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்களை ஓய்வறை அனுப்பியிருந்தனர். இதனால், ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணி 136 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில், களத்தில் நின்ற பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பராஸ் அஹ்மட் உடன் கைகோத்திருந்த பாஹிம் அஷ்ரப் சிறிது போராட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறனதொரு நிலையில், அணியின் 7 ஆம் விக்கெட்டாக திசர பெரேராவின் 'ரன் அவுட்' மூலம் பாஹிம் அஷ்ரப் 15 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்ப போட்டி முழுவதும் இலங்கை அணியின் பக்கம் சாய்ந்தது.

எனினும், 8 ஆம் விக்கெட்டிற்காக அணித்தலைவர் சர்பராஸ் மற்றும் மொஹமட் அமீர் ஆகியோர் ஜோடி சேர்ந்து நிதானமான முறையில் வீழ்த்தப்படாத இணைப்பாட்டம் ஒன்றினை (75 ஓட்டங்கள்) வழங்க, முடிவில் பாகிஸ்தான் அணி 44.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைக் குவித்து வெற்றி இலக்கை அடைந்தது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில், இறுதி வரை ஆட்டமிழக்காமல் நின்றிருந்த அவ்வணியின் தலைவர் சர்பராஸ் அஹ்மட் 79 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களையும், மொஹமட் அமீர் பெறுமதிமிக்க 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு விக்கெட்டுகளை கைப்பற்றியிருப்பினும், போட்டியின் முக்கிய தருணங்களில் இரண்டு பிடியெடுப்புகளையும் பல 'ரன் அவுட்' களையும் தவறவிட்டு களத்தடுப்பில் மிகவும் மோசமாக செயற்பட்டிருந்தனர். இதுவே இலங்கை அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில், நுவன் பிரதீப் 3 விக்கெட்டுகளையும் லசித் மலிங்க, சுரங்க லக்மால் மற்றும் திசர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதமும் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியின் வெற்றி மூலம், சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருக்கும் பாகிஸ்தான் அணி இன்று இங்கிலாந்து அணியை முதலாவது அரையிறுதிப்போட்டியில் எதிர்கொள்கின்றது. அதே போன்று, குழு 'பி' இல் இருந்து அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகிய இந்திய அணி நாளை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கின்றது.

இதேவேளை, மிகவும் மோசமான களத்தடுப்புக் காரணமாகவே சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அரையிறுதி வாய்ப்பை தவற விட்டோம் என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் போட்டியைத் திரும்பிப் பார்க்கும்போது, மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம் என்பது தெரிகிறது.

அதுவும் எங்கள் களத்தடுப்பு மிகவும் மோசமானதாக இருந்தது. நாங்கள் மட்டும் எங்களுக்கு வந்த பிடிகளை எடுத்திருந்தால், வேறொரு கதையைப் பற்றி பேசியிருப்போம்.

ஆனால், ஆட்டத்தின் முக்கியமான நேரங்களில் பிடிகளை நாங்கள் தொடர்ச்சியாக நழுவவிட்டோம் என்றும் அவர் வருத்தமாக தெரிவித்துள்ளார்.

## சம்பியன்ஸ் கிண்ணத் தோல்வி: அடுத்த உலகக் கிண்ணத்தொடரில் மலிங்க விளையாடுவது உறுதியில்லை!

கொழும்பு, ஜூன் 14

சம்பியன்ஸ் கிண்ண லீக் தொடரில் இலங்கை அணி, பாகிஸ்தான் அணியிடம் தோல்வியைச் சந்தித்தது.


இதனால் இலங்கை அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.


போட்டி முடிந்த பின்னர் மத்தியூஸ் பத்திரிகையாளரைச் சந்தித்த போது, மலிங்கவை 2019 ஆம் ஆண்டு எதிர்பார்க்கலாமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு மத்தியூஸ் பதில் அளிக்கையில்-

இதை என்னால் நிச்சயமாகக் கூறமுடியாது, இடையில் எதுவும் நடக்கலாம். அவர் தலை சிறந்த பந்து வீச்சாளர். இந்தப் போட்டியில் கூட சிறப்பாக செயற்பட்டதுடன், தன்னால் எந்த அளவிற்கு அணிக்கு உதவ முடியுமோ அந்த அளவிற்கு உதவினார். ஆனால் பாகிஸ்தான் போட்டியில் அவரின் ஓவரில் பிடியைத் தவற விட்டுவிட்டோம். அவர் இலங்கைக்குக் கிடைத்த மிகச் சிறந்த வீரர். வெவ்வேறு விதமாக பந்து வீசும் திறன் உடையவர்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சொந்த மண் போட்டிகளிலிருந்து வெற்றியுடன் விடைபெற்றார் உலக சாதனை நாயகன் போல்ட்!





லண்டன், ஜூன் 14

குறுந்தூர ஓட்டங்களில் உலக சாதனை நாயகனான உசைன் போல்ட், ஜமெய்க்காவின் கிங்ஸ்டன் விளையாட்டரங்கில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஈட்டிய வெற்றியுடன் சொந்த மண்ணில் மெய்வன்மைப் போட்டியில் இருந்து விடைபெற்றார்.

லண்டனில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உலக வல்லவர் போட்டிகளுடன் மெய்வன்மை போட்டியிலிருந்து 30 வயதான உசைன் போல்ட் முழுமையாக விடைபெறவுள்ளார்.

'மேதைக்கு வணக்கம் செலுத்துங்கள்' என்ற பெயரிலான ஓட்டப் போட்டியில் போல்ட் இலகுவாக வெற்றிபெற்றார். இந்த வருடம் அவர் பங்குபற்றிய 100 மீற்றர் ஓட்டப் போட்டி இதுவாகும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றுகையில் சற்று படபடப்பு ஏற்பட்டது என அவர் தெரிவித்தார். இப்போட்டியை 10.03 செக்கன்களில் நிறைவுசெய்து வெற்றியீட்டிய உசைன் போல்ட், முடிவுக் கோட்டை முத்தமிட்டமையுடன் மைதானத்தைச் சுற்றி வந்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி சொந்த மண் போட்டிகளிலிருந்து விடைபெற்றார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அரங்கில் குழுமியிருந்த இரசிகர்கள் நடனமாடியும், ஊதுகுழல்களில் ஓசை எழுப்பியும், கொடிகளை அசைத்தும் ஆரவாரம் செய்தனர்.

''இந்த ஓட்டம் சரியாகத்தான் அமைந்தது. ஆனால், இதற்கு முன்னர் 100 மீற்றரை ஓடும்போது இந்தளவுக்கு படபடப்பு அடையவில்லை'' என்றார் போல்ட்.

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் 8 தங்கப் பதக்கங்களை வென்ற வரும் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் உலக சாதனையாளருமான போல்ட், தனது வெற்றியின் பின்னர் தனது முத்திரையான அம்பெய்யும் சாயலை சொந்த மண்ணில் கடைசி முறையாக புரிந்து காட்டினார்.

# பொதுநலவாய விளையாட்டு சம்மேளன ஆசிய பிராந்திய கூட்டம் கொழும்பில்!




கொழும்பு, ஜூன் 14

பொதுநலவாய விளையாட்டு விழாக்கள் தொடர்பாக தோன்றியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு பொதுநலவாய விளையாட்டுத்துறை சம்மேளனத் தலைவர் லூயிஸ் லிவிங்ஸ்டோன் மார்ட்டினின் பங்குபற்றலுடன் பொதுநலவாய விளையாட்டுத்துறை சம்மேளனத்தின் ஆசிய பிராந்தியக் குழுக் கூட்டம் கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டம் பொதுநலவாய விளையாட்டுத்துறை சம்மேளனத்தின் ஆசிய பிராந்தியத்திற்கான உதவித் தலைவரும் பொதுநலவாய விளையாட்டுத்துறை சங்கத்தின் தலைவரும் தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவருமான ஹேமசிறி பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பாக பஹாமாஸில் இவ் வருடம் நடைபெறவுள்ள இளையோர் பொதுநலவாய விளையாட்டு விழா, கோல்ட் கோஸ்டில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழா ஆகியன தொடர்பாகவும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையில் இந்தக் கூட்டம் நடைபெறுவது இது இரண்டாவது தடவையாகும். கடந்த மூன்று வருடங்களாக இந்தக் கூட்டம் நடைபெற்றுவருகின்றது எனவும் இக் கூட்டத்தை இலங்கையில் இந்த வருடமும் நடத்துமாறு தான் விடுத்த வேண்டுகோளுக்கு ஆசிய பிராந்திய நாடுகளின் பிரதிநிதிகள் மனப்பூர்வமாக இணக்கம் தெரிவித்து இங்கு வருகை தந்தனர் எனவும் அடுத்த வருடமும் இக் கூட்டத்தை இங்கு நடத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் பிரதான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதென்பது இலகுவான காரியமல்லவெனவும் அவர் குறிப்பிட்டார்.

''இன்னும் 10, 15 வருடங்களின் பின்னரும் பிரதான விளையாட்டுக்களை இங்கு நடத்துவதென்பது முடியாத காரியம். உலகத் தரம்வாய்ந்த விளையாட்டரங்குகள் நிர்மாணிக்கப்படாவிட்டால் தெற்காசிய விளையாட்டு விழாவையும் இங்கு நடத்துவது குறித்து நினைத்துக் கூடப் பார்க்க முடியாது'' என்றார் ஹேமசிறி பெர்னாண்டோ.

பொதுநலவாய விளையாட்டுத்துறை சம்மேளன ஆசிய பிராந்தியக் கூட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், பங்களாதேஷ், மலேஷியா, இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசிய பொதுநலவாய விளையாட்டுத்துறை சம்மேளனத் தலைவர் லூயிஸ் லிவிங்ஸ்டோன் மார்ட்டின், ''இலங்கைக்கு மீண்டும் வருகை தருகின்றமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த வருடம் இங்கு நடைபெற்ற கூட்டத்தின் போது பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டோம். அதேபோன்று புதிதாக தோன்றியுள்ள பிரச்சினைகள் குறித்தும் பொதுநலவாய விளையாட்டுத்துறை விடயங்கள் குறித்தும் இம்முறை விரிவாக கலந்துரையாட முடியும்'' என்றார்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் நாயகம் சமன் பண்டார, ''தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் விளையாட்டுத்துறை சம்மேளனங்களின் ஊடாக உலக நாடுகளுடன் ஆக்கபூர்வமான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. அவற்றில் புதிய விளையாட்டுத்துறை கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பில் திருத்தம் என்பன முக்கியம் வகிக்கின்றன. மேலும், பொதுநலவாய விளையாட்டுத்துறையுடனான எமது உறவும் பங்களிப்பும் தொடர்ந்து இடம்பெறும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பத்தாவது தடவையாக சம்பியனானார் நடால்!



பாரிஸ், ஜூன் 14

சுவிற்ஸர்லாந்து வீரர் ஸ்டனிஸ்லோஸ் (ஸ்டான்) வொரின்காவுக்கு எதிராக ஞாயிறன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3 நேர் செட்களில் வெற்றி பெற்ற ஸ்பெய்ன் வீரர் ரபாயல் நடால், பத்தாவது தடவையாக பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் வரலாற்றில் பத்துத் தடவைகள் சம்பியனான முதலாவது வீரர் என்ற சாதனையையும் நடால் நிலைநாட்டினார்.

இந்த இறுதிப் போட்டி பாரிஸ், ரோலண்ட் கெரொஸ், பிலிப்பே செட்ரியர் டென்னிஸ் அரங்கில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வொரின்காவிடம் சவால் எதனையும் எதிர்கொள்ளாத நடால் இலகுவாக வெற்றி பெற்றார்.

முதலாவது செட்டில் 6 - 2 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் இரண்டாவது செட்டில் 6 - 3 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் மூன்றாவது செட்டில் 6 - 1 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் நடால் வெற்றிபெற்றார்.

மாபெரும் டென்னிஸ் இறுதிப் போட்டி ஒன்றில் இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தமை இதுவே முதல் தடவையாகும்.

## நெடுங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையோடு மற்றுமொருவர் காயமடைந்தார்.

தண்டுவானிலிருந்து நெடுங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் வற்றாப்பளை கோவிலிலிருந்து வவுனியா நோக்கி வந்த வான் ஒன்று நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் தண்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதான நல்லையா சகுந்தலாதேவி என்பவர் உயிரிழந்தார். 32 வயதுடைய கனகலிங்கம் ஜனார்த்தன் என்பவர் படுகாயமடைந்தார். காயங்களுக்கு உள்ளான நபர் நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் நெடுங்கேணி மற்றும் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரருக்கு) உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதால், அவரால் மன்றில் ஆஜராகமுடியாது என மன்றுக்கு அறிவித்தார்.

'காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதிமன்றத்துக்குள் வைத்து, கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதியன்று, ஞானசார தேரர் திட்டி மிரட்டியிருந்தார் எனக் கூறப்பட்டது. ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்துக்குள் வைத்து, ஞானசார தேரர் நடந்துகொண்ட முறை, நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையுமா என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கருத்தை ஹோமாகம நீதிவான் ரங்க திஸாநாயக்க கோரியிருந்தார்.

அத்தோடு, ஞானசார தேரர் மீதான குற்றச்சாட்டு நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படுமாயின், அவர் மீதான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் நீதிவான் கோரியிருந்தார்.

இது தொடர்பான வழக்கின் கடந்த இரு அமர்வுகளுக்கும் ஆஜராகாமையால், ஞானசார தேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்து உத்தரவிடுமாறு சட்டமாஅதிபர்சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரோஹந்த அபேசூரியவால் கோரப்பட்டது.

அந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதியரசர்கள் குழாம் மனு மீதான விசாரணைக்கான தினங்களாக ஜூலை மாதம் 18,19 மற்றும் 20ஆம் திகதிகளை நியமித்து உத்தரவிட்டது.

கடந்த அமர்வின் போது, ஞானசார தேரர் சுகவீனம் காரணமாகவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறிய அவரது சட்டத்தரணி மனோகரடி சில்வா, மருத்துவ அறிக்கையையும் மன்றில் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. குழந்தையின் பெற்றோர்படுகாயமடைந்தனர்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேலணை 3 ஆம் வட்டாரம் அல்லப்பிட்டியைச் சேர்ந்த கணேஸ் ராஜதாஸ் (வயது 33) மற்றும் ராஜதாஸ் மேரி றொசியா (வயது 36) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (உ-22)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறைப்பகுதியில்மோதுண்டகார் கடும் சேதமடைந்தது.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த களுத்துறைப் பதில் நீதிவான் வை.எஸ்.டி.சில்வாவும் மற்றிருவரும் படுகாயமடைந்தனர்.

மூவரும் நாகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரேராவே இது தொடர்பான கோரிக்கை ஒன்றை எழுத்து மூலம் ஜானதிபதியிடம் முன்வைக்க விருக்கின்றார் என்றும் –

இதற்கான கோரிக்கைக் கடிதம் தயாராகி வருகின்றது என்றும் –

அவரது அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளபோதிலும் நெருக்கடியான சமயங்களில் அவற்றின் விடயங்களில்ஜனாதிபதிதலையிடமுடியும் என அமைச்சர் சுட்டிக் காட்டுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சரசாலை – புத்தூர் வீதியின் ஊடாக நடந்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த முதியவர் ஒருவரை கன்ரர் ரக வாகனம் மோதித் தள்ளியது.

சரசாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த 65 வயதான சிவசுந்தரம் என்பவரே இந்த விபத்தில் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய கன்ரர் வாகனம் தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் சனிமா விஜேபண்டார வழங்கினார்.

அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நிதிக் குற்றவியல் பொலிஸார் இவரை நேற்றுக் காலை கைது செய்திருந்தனர்.

2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடைய தரப்புகளினால் அரச வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து பல நூறு கோடி ரூபா ரொக்கப் பணம் மீளப்பெறப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருந்ததுஎன முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (உ)

## தமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளைப் பூர்த்தி செய்யாமல் தம்மைக் கைது செய்வதற்குத் தயாராகி வருகின்றனர் என அவர் இந்த மனுவில் தெரிவித்திருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட விவகாரம் தொடர்பான முழு விசாரணைகள் பூர்த்தியடைந்து, உரிய வழிகாட்டுதலுக்காக சட்டமா அதிபரிடம் விடயம் கையளிக்கப்படும் வரை தம்மைக் கைது செய்யக் கூடாது எனஉத்தரவிட வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் கோரியிருக்கின்றார்.

திட்டமிட்டு முன்னெடுக்கப்படும்குற்றச்செயல்களைத்தடுக்கின்றபொலிஸ்பிரிவின்பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## காட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளில்பயணித்தபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்கானார்எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் எல்லேவெல பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 7.30 மணியளவில் தம்மைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய முதலமைச்சரிடமே இவ்வாறு விடயங்களை வெளிப்படையாக எடுத்துரைத்தார் மாவை சேனாதிராசா.

அதற்குமுன்னர் நேற்றுமுதல்வர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் மூத்த தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

விசாரணைக்குழு அறிக்கை தொடர்பில்சம்பந்தனின்கருத்து நிலைப்பாட்டை அறிவதற்கு முதலமைச்சர் முயன்றார்.

"எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கனவே வெளிப்படையாகக் கூறிவிட்டோம். இது நீங்கள் நியமித்த குழு. உங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த குழு. அந்தக் குழு தனது பரிந்துரைகளை–சிபார்சை–முன்வைத்துள்ளாயின், அது தொடர்பில் முடிவெடுத்துச்செயற்படுத்த வேண்டியவர் நீங்கள்தான்.

" ஆனால் குற்றம் நிரூபிக்கப்படாதவர்களையும் – அல்லது குற்றச்சாட்டிலிருந்து குழுவினால் விடுவிக்கப்பட்டவர்களையும் – குற்றவாளி போலாக்கி, ஏனைய இருவருடனும் சேர்த்து நீங்கள் நீக்குவது பொருத்தமற்றது என்றே எமது தமிழரசுக் கட்சியினர் கருதுகின்றனர் என நான் அறிகிறேன்.

"ஆனால், நீங்களோ நான்கு அமைச்சர்களையும் ஒன்றாக நீக்கி, அதற்காகப் புதிய நால்வரை நியமிக்கவும் தயராகிவிட்டீர்கள் என்று செய்திகள் வெளிவருகின்றனவே!

"இந்த விடயம் குறித்து நீங்கள் மற்ற மூன்று கட்சித் தலைவர்களுடனும் பேசிவிட்டீர்கள். ஏன் இன்னும் பிரதான கட்சியான இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடனும் பேசவில்லை ? அவருடன் பேசுங்களேன் !" – என்று சம்பந்தன் விநயமாகவும் அதே நேரம் காட்டமாகவும் எடுத்துரைத்தார் என அறிய வந்தது.

இதையடுத்து நேற்றிரவு முதல்வர் விக்னேஸ்வரன் மாவை சேனாதிராசாவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அப்போதே தமது திட்டவட்டமான நிலைப்பாட்டைத் தெளிவாகவும், உறுதியாகவும் மாவை சேனாதிராசா எடுத்துரைத்தார் என அறியவந்தது.

பக்கம் 03 »

## 4 அமைச்சர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகிய மூவருமே முதல்வரின் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

ஆனாலும், கூட்டமைப்பின் வலிமைமிக்க கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி அது விடயத்தில் கடும் போக்காக இருப்பதால் என்ன செய்வது என்று தெரியாமல் முதல்வர் தடுமாறி நிற்கின்றார் எனவும் கூறப்பட்டது.

மேற்படி விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியான கையோடு நான்கு அமைச்சர்களையுமே மாற்ற வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் பகிரங்க அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருந்தார். இதே கருத்தைத் தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட முதலமைச்சரிடம் சுரேஷ் பிறேமச்சந்திரன் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அதேபோல மேற்படி அறிக்கை வெளிவந்தபோது ரெலோ அமைப்பும் நான்கு அமைச்சர்களும் மாற்றப்படுவது நல்லது என்ற சாரப்படப் பகிரங்க அறிக்கை வெளியிட்டிருந்தது.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இதே கருத்தை நேற்றுத் தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட முதல்வரிடம் உறுதிப்படுத்தினார்.

இதேசமயம், ஓரிரு தினங்களுக்கு முன்னர் தம்மை நேரில் சந்தித்த புளொட் தலைவர் சித்தார்த்தனிடமிருந்தும் இவ்வாறு நான்கு அமைச்சர்களையும் ஒரேயடியாக மாற்றும் யோசனைக்குப் பச்சைக் கொடி சமிக்ஞையை முதல்வர் பெற்றிருந்தார் எனத் தெரியவந்தது.

இதேவேளை –

மேற்படி நான்கு அமைச்சர்களும் ஊழல், முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர், ஆகையால் அவர்கள் மீது விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் அன்ரனி ஜெகநாதனின் ஏற்பாட்டில் இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் சபை உறுப்பினர்களின் கையொப்பத்துடனான கடிதம் ஒன்று முதல்வருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில் ஒப்பமிட்ட 16 பேரில் பெரும்பாலானோருடன் இப்போது தொடர்பு கொண்ட முதல்வர், நான்கு அமைச்சர்களையும் ஒரேயடியாக மாற்றும் யோசனை தொடர்பில் அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

பெரும்பாலானோர் நான்கு அமைச்சர்களையும் மாற்றும் முடிவுக்கு முழு ஆதரவு வெளிப்படுத்தியுள்ள போதிலும், அவ்விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் பிரதான பங்காளியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முழு எதிர்ப்புக் காரணமாக இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் திரிசங்கு நிலையில் முதல்வர் அல்லாடுகின்றார் எனக் கூறப்பட்டது. (உ)

## பரபரப்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் பேரில் நடை பெறுகின்றது.

மேற்படி விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் இடையே கடுமையான முரண்பாடு நிலவும் நிலையில் அதன் பிரதிபலிப்பு இன்றைய கூட்டத்தில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய கூட்டத்தில் ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் தமிழரசுக் கட்சியினர் ஒரு புறமும் ஏனைய மூன்று கட்சிகளைச் சேர்ந்தோர் மற்றொரு புறமுமாகக் கன்னை பிரியும் வாய்ப்புகள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவான அனந்தி சசிதரன் மற்றைய மூன்று கட்சிகளின் உறுப்பினர்களுடன் நிலை எடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தவறு இழைத்தவர் என விசாரணைக் குழுவால் அடையாளம் காட்டப்பட்ட கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, இலங்கைத்தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவராயினும் அவரைக் குற்றச்சாட்டுக்களில் இருந்து காப்பாற்றுவதற்கு இலங்கைத்தமிழரசுக்கட்சியினர் முயலமாட்டார்கள் என்றும் கூறப்பட்டது. (உ)

## மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளிப் போடுவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமைபோல, எந்த ஊடகவியலாளரும், அவசர சமயங்களில் தொடர்புகொண்டு செய்திகள், தகவல்கள் குறித்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத 'தொலைவில்' முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எப்போதும் இருக்கின்றமையால், நேற்று மாலைக்குப்பின்னர் கட்டவிழ்த்த தற்போதைய நெருக்கடி குறித்து அவரது பக்கத் தகவல்களை நேரடியாக அவரிடமே தொடர்புகொண்டு கேட்டறிய முடியவில்லை.

அவருடன் தொடர்புடைய தரப்புகள் சில தெரிவித்த கருத்துகளில் இருந்தே விடயங்களை அறிய வேண்டிய நிலைமை ஊடகவியலாளர்களுக்கு இருந்தது.

நேற்றிரவு 7.30 மணியளவில் மாவை சேனாதிராசாவுடன் தொலைபேசியில் உரையாடிய சமயமே தாம் எல்லோரினதும் கருத்துகளை இப்போதைக்கு உள்வாங்குவார், அவசரப்பட்டு முடிவு எதையும் எடுக்க மாட்டார் என்ற நிலைப்பாட்டை – அல்லது தற்காலிக முடிவை – முதல்வர் எடுத்து, அதனை மாவை சேனாதிராசாவுக்கும் கோடி காட்டிவிட்டார் என்றும் அறிய வந்தது. (உ)

## விசாரணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகத்தில் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசாவின் தலைமையில் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று முன்னிரவு கூடி சுமார் ஒன்றரை மணி நேரம் இவ் விடயம் குறித்துக் கலந்துரையாடினர்.

அக்கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

தமிழரசுக் கட்சி உறுப்பினர்களின் அந்தக் கோரிக்கை செவிமடுக்கப்படாமல், தொடர்ந்து இவ் விடயத்தை ஆராய்வது என சபை இன்று தீர்மானிக்குமாயின், அச்சமயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கு சேர சபையிலிருந்து வெளிநடப்புச்செய்வர் என்றும் நேற்றிரவு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

"இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தமது தன்னிலை விளக்கத்தை ஏற்கனவே முதலமைச்சருக்கு எழுத்தில் வழங்கிவிட்டனர் இந்தச் சூழலில் இது பற்றிப் பகிரங்கமாகப் பேசி, அலங்கோலங்களை – முரண்பாடுகளை – அரங்கேற்றி மேலும் சபையின் கௌரவத்தைக் கெடுக்கத் தேவையில்லை. இது முதமைச்சர் தமக்கு ஆலோசனை கூற நியமித்த குழு. அந்தக் குழு தனது அறிக்கையை முதல்வரிடம் வழங்கிவிட்டது. அது குறித்து இனித் தீர்மானிக்க வேண்டியவர் முதல்வர்தான்.

அதை விடுத்து, இது குறித்துப் பகிரங்க அமர்வு நடத்தி விவாதிக்கத் தேவையில்லை. உறுப்பினர்களின் கருத்துக்களை அறிய முதல்வர் விரும்புவாராயின், உறுப்பினர்களைத் தாமே தனித் தனியே அழைத்துக் கருத்துக்களை அவர் கேட்டறிய முடியும்.

அதை விடுத்து, இந்த விடயங்களை 'குரங்கின் கைப் புண்ணாக்கி' சீழ் வடிய வைக்கத் தேவையில்லை." – என்ற சாரப்பட இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இன்று சபையில் சுட்டிக் காட்டிக் கோருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏனைய எதிரணி உறுப்பினர்களும் மற்றும் கூட்டமைப்பின் மற்றைய மூன்று கட்சி உறுப்பினர்களும் மேற்படி அறிக்கை குறித்த உறுப்பினர்களின் கருத்துப் பகிரங்க அமர்வில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோருவர் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அப்படி விவாதத்தைத் தொடர்ந்து நடத்தத் தவிசாளர் தீர்மானித்தால் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்வர் என்றும் கூறப்பட்டது. (உ)

# மைத்திரி மீது நாமல் ராஜபக்ஷவுக்கு கடுகளவேனும் விசுவாசம் இல்லையாம்!

## காரணங்களையும் அடுக்குகிறார்

கொழும்பு, ஜூன் 14

நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில் மைத்திரி மீது எமக்கு மதிப்பு உண்டேதவிர, அவர் மீது எமக்குக் கடுகள வேனும் விசுவாசம் இல்லை. இதனால் தான் மஹிந்த அணி யால் அவரின் தலைமையை ஏற்று அவருடன் இணைய முடியாமல் உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்மூத்தபுதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

எம்மைச் சிறையில் அடைத் தமையைப் பொருட்படுத்தாது எம்மை அமைப்பாளர் பதவி யிலிருந்து நீக்கியமையும் பொருட்படுத்தாது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அவருடன் இணைந்து செயற் பட்டோம். அவரது தலைமை யின்கீழ் போட்டியிட்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை நிறுவும் நோக்கில் தான் நாம் அந்தத் தேர்தலில் போட்டியிட்டோம்.

ஆனால், எவர் வென்றாலும் ரணில்தான் பிரதமராக நியமிக் கப்படுவார் என்று ஜனாதிபதி இறுதிச் சந்தர்ப்பத்தில் அறி வித்தார். அதன்படியே செய்தார்.

இதனால், ஜனாதிபதி மைத் திரி மீது நாம் நம்பிக்கைஇழந்து விட்டோம். ஆனால், அவருடன் நாம் இணைந்து செயற்பட வேண்டும் என்று சிலர் விரும் புகின்றனர். அப்படி இணை வதாக இருந்தால் அவர் மீதான நம்பிக்கையின்மையுடன்தான் இணைய வேண்டும். அது வெற்றிகரமான இணைவாக இருக்காது.


இப்போது இந்த அரசுக்கு எதிராக இந்த அரசின் மக்கள் விரோதச் தேசவிரோத கொள் கைக்கு எதிராக மக்கள் கிளர்ந் தெழுந்துள்ளனர்.

இந்த நிலையில், எம்மால் அரசுடன் இணைய முடியாது. அரசுடன் இணைந்து தேர்தல் களில் போட்டியிட முடியாது.

நாம் அரசுடன் இணைந்தால் அம்பாந்தோட்டையை சீனா வுக்கு விற்கும் அரசின் முடிவை எம்மால் எப்படி எதிர்க்க முடி யும்? அரச சொத்துகளை விற் கும் திட்டத்தை எப்படி எதிர்க்க முடியும்? ஜெனீவாத் தீர்மா னத்தை எப்படி எதிர்க்க முடி யும்?

இப்படியானதொரு நிலை மையில் எப்படி எம்மால் அர சுடன் இணைந்து மக்களிடம் செல்வது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக இன்றுபுதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவு னியா பிரதேசத்தில் தெற் கிலுப்பைக்குளம் பிரதேசத் திலும்-

நாளை வியாழக்கிழமை-

காலை 8 மணியிலி ருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் பொம்மைவெளி, நாவாந் துறை, மண்பிட்டி, சூரிய வெளி ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சிபிரதேசத்தில் ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயங்கட்டு, வேரா வில், கிராஞ்சி, வலைப்பாடு, குமுழமுனை, கரியாலைப் படுவான், அன்புபுரம், முழங் காவில், நாச்சிக்குடா, வெள் ளாங்குளம், 651ஆவது பிரிவு இராணுவமுகாம், நாச்சிக் குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங் களிலும்-

வவுனியாபிரதேசத்தில் தெற்கிலுப்பைக்குளம், நேரியகுளம், இலுப்பைக் குளம், அழகாபுரி, சின்னக் குளம், துட்டுவாகை, சின்ன சிப்பிக்குளம், முதலியார் குளம், கப்பாச்சி, முகத்தான் குளம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களி லும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

## துறைமுக அபிவிருத்தி சபைக்கான மூன்றாண்டுத் திட்டம்!




கொழும்பு, ஜூன் 14

இலங்கைத் துறைமுக அபி விருத்திச் சபைக்கான மூன் றாண்டுத் திட்டம் தயாரிக்கப் படுகிறது.

துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறையின் புதியபோக்குப் பற்றி கவனம் செலுத்தி இந்த மூலோபாய திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

4 ஆயிரத்து 400 கோடி பில்லியன் ரூபாவாக காணப் படும் அதிகார சபையின் வரு மானத்தை மூன்று இலக்கங் களால் ஆன வருமானமாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் பணிப்புரைக்கு அமைய துறைமுக அதிகார சபை நிர்வாகம் இதற்கான வேலைத்திட்டங்களை முன் னெடுக்கிறது என்றும் தெரி விக்கப்படுகிறது.

## இனவாத செயற்பாடுகளை அடக்க விசேட அதிரடிப் படையினர் களத்தில்!

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் இனவாதிகளால் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப்படை களத் தில் இறக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் அதிரடி படையினர் தமது நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் இனவாத செயற்பாடுகள் இரவு நேரங்களில் மேற்கொள் ளப்படுகின்றனஎனப்பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, உரிய பிரிவுகளுக்குஅறிவித்துள்ளது.

கொழும்பு உட்பட தெரிவு செய்யப்பட்ட ஏனைய மாவட் டங்களில், மோட்டார் சைக் கிள் குழு, நடமாடும் சேவை, அவசர வீதி நடவடிக்கைகள் என்பனவற்றை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதி காரிகளை மேற்கொள்ளு மாறு உத்தரவிடப் பட்டுள்ளது எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதம் ஏந்திய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தங்கள் செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லதீப்பின் நேரடி கண்காணிப் பின் கீழ் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட உள்ளது எனத் தெரிவிக் கப்படுகிறது. (க)

## யாழ்.கோட்டை முனீஸ்வரனுக்கு அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம், கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அலங்கார உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 27 நாள்கள் இடம் பெறும்.

தினமும் மாலை 4.30 மணிக்கு ஸ்நபனா அபிஷே கம் ஆரம்பமாகி 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும்.

26 ஆம் நாளான ஜூலை 20 ஆம் திகதி காலை தீர்த் தோற்சவமும்நடைபெற்று மறு நாள் வைரவர் சாந்தியுடன் உற்சவம் நிறைவுபெறும். (இ)

## தபால்துறைக்கு ரூ. 4 கோடி வரை நஷ்டம்!

கொழும்பு, ஜூன் 14

இயற்கை அனர்த்தங்களால் தபால்துறைக்கு ஏற்பட்ட நஷ்டம் 3 கோடியே 80 லட் சம்ரூபாவைஎட்டுவதாக தபால் மா அதிபர் ரோஹண அபயரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட் டங்களில் 71 தபாலகங்கள் சேதமடைந்துள்ளன.

சேத விவரங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தபால கங்களை மீளமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படும். எந்தவொரு தபாலகத்திலும் தபால் விநி யோகப் பணி முடங்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

## மின்சார சபை தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்துக்கு முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 14

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின் சாரசபை தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட வுள்ளன என்று தெரிய வரு கின்றது.

நீண்டகாலமாக இழுபறியில் இருக்கும் தங்களது சம்பளப் பிரச்சினை, உயரதிகாரிகளின் பாரபட்சமான எதேச்சதிகாரப் போக்குகள், பழிவாங்கல்கள், அடக்குமுறைகள் போன்ற வற்றுக்குத் தீர்வு காண்பதற் காகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என பொது சேவையாளர் சங் கத்தின் தலைவர் மாலக சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"மின்சாரசபையின் பெரும் பாலான ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் போது பொறியியலாளர்களுக்கு 'ஈ'ஸ்கேல்' முறையில் கொழுத்த சம்பளம் வழங்கப்பட்டு வரு கின்றது.

இவ்வாறான அநீதிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து கடந்த காலங்களில் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டவர் கள் பல்வேறு முறைகளில் பழிவாங்கப்பட்டுவருகிறார்கள்.

சபையின் தலைவரின் கீழ் இயங்கி வந்த உள்ளக கணக் காய்வாளர் பிரிவும் சட்டப்பிரி வும்பொதுமுகாமையாளருக்குக் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இத்தகைய அநீதிகளைத் தொடர்ந்தும் சகித்துக் கொண் டிருக்க முடியாத நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி நாங் கள் விஹாரமகாதேவி திறந்த வெளியரங்கில் கூடி எமது எதிர்ப் பைத் தெரிவிக்கவுள்ளோம்.

அரசு தொடர்ந்தும் எங்களது போராட்டத்துக்கு செவிசாய்க் காமல் அடம்பிடித்தால் நாட ளாவிய ரீதியில் பெரும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம்" எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# காணாமற் போனோரின் உறவுகள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது...




காணாமற் போனோரின் உறவுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர் கலந்துகொண்டனர். தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் இச்சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் கையளித்தனர். (இ)

## அரச நிதி துஷ்பிரயோகம்: கெஹலிய மீது வழக்கு



நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்துள்ளது.

ஊடக அமைச்சராக அவர் கடமையாற்றிய போது இரண்டு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கான தனிப்பட்ட தொலைபேசி கட்டணத்தை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் நிதியில் செலுத்தியமை தொடர்பிலேயே இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய தொலைபேசி கட்டணமே இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹிக்கண்டவுக்கு எதிராகவும் இந்த விடயம் தொடர்பில் லஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு வழக்கு தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் தங்களது தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக அரசு அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா அலவன்ஸ் வழங்கி வந்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள லஞ்ச ஆணைக்குழு, ஆனால் முன்னாள் அமைச்சர் கெஹலியவின் கட்டணம் வேண்டுமென்றே அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அமைச்சர் கெஹலிய தமது தொலைபேசிக் கட்டணத்தை அரச அச்சக கூட்டுத்தாபன வாடிக்கையாளர் ஊடாக தவறான முறையில் செலுத்தியுள்ளார் எனவும், அதற்கு கூட்டுத்தாபனத் தலைவராக இருந்த ஜயம்பதி பண்டார ஹிக்கண்ட சதி செய்து உதவினார் என்றும் கூறப்பட்டது.

மேற்படி வழக்கு ஜூலை 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.


இது தவிரவும், அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்து ஏழரைக் கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்தமை தொடர்பில் 13 லஞ்ச, ஊழல் வழக்குகள் ஹிக்கண்டவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தனங்கிளப்பில் விபத்து; நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, தனங்கிளப்புப் பகுதியில் நேற்று மதியம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில், வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

காயமுற்றோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இருவர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (உ)




## விமான நிலையத்தில் $2\frac{1}{2}$ கிலோ நகையுடன் வசமாகச் சிக்கிய விமானப் படைச் சிப்பாய்



கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றும் இலங்கை விமானப்படையின் சிப்பாய் ஒருவர் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்புடைய இரண்டரைக் கிலோ கிராம் தங்க நகைகளுடன் விமான நிலைய சுங்கப் பகுதியினரிடம் நேற்றுக் காலை வசமாகச் சிக்கினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நகைகளைத் தமது காலில் சுற்றிக் கட்டி மறைத்தபடி, விமான நிலையத்தின் வருகைப் பகுதியிலிருந்து வெளியேறும் பகுதிக்குச் சென்ற சமயம் அவர் மடக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## திடீரென வலுவடைந்த ரூபா

கொழும்பு, ஜூன் 14


இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வலுவடைந்து காணப்பட்டதாக புதிய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டுப் பணியாளர்களால் நேற்று இலங்கையில் மேற்கொண்ட பணப்பரிமாற்றம் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும்.

இதன்காரணமாக இறக்குமதியாளர்களின் டொலரின் தேவைக்கு அதிகமாக வெளிநாட்டு பணியாளர்களின் நாணயப்பரிமாற்றம் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கியினால் நேற்று வெளியிடப்பட்ட நாணய மாற்று அறிக்கைக்கு அமைய, டொலர் ஒன்றுக்கான ரூபாவின் பெறுமதி 152.80 முதல் 152.85 ரூபா எனப் பதிவாகியுள்ளது.

இந்த வருடத்தில் வெளிநாட்டு இருப்புகளைப்பாதுகாப்பதற்காக மத்திய வங்கியால் 120 கோடி அமெரிக்க டொலர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (உ)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற திருச்சொரூபப் பவனியின்போது...

## கூட்டணித் தலைவர் காலமானார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும், கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் உறவினரும், பொறியியலாளருமான இளையதம்பி சாந்தசொருபன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவராக நீண்ட காலம் இருந்து வந்த இவர், 2016ஆம் ஆண்டு கூட்டணியின் வருடாந்த மாநாட்டில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

"கட்சியின் மிக நீண்டகால உறுப்பினராக இருந்து துணிச்சலுடன் செயலாற்றிய அவர் சோதனையான காலகட்டத்தில் உறுதியுடன் தோள்கொடுத்தவர். தலைவராகத்தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கட்சியை எவ்வாறு வழிநடத்தி முன்னோக்கிச் செல்லலாம் எனப் பல தரப்பினருடனும் ஆலோசனைகளை மேற்கொண்டு வந்தவர்.

"சமீபத்தில் உடல்நலம் குன்றியதால் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அவர் நேற்று முன்தினம் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நேற்றுக் காலை இயற்கை எய்தினார்.

"அன்னாரின் மறைவு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்." - இவ்வாறு கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள [illegible] பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாரித்து 672B கே.கே.எஸ். வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.